# ரோஜா



ஆனி 1995 மலர்-2 இதழ் -8

$1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் குமரன்

சாறீஸ் அன் பாஷன்

(416) 285-6797
(416) 924-5329

* பனாரஸ்
* காஞ்சிபுரம்
* மைசூர் சில்க்
* 5 COLOUR SAREES
* சீருவின் சாறீஸ்



# NALLUR KUMARAN
## SAREE PALACE

**A Div. of RISHIS IMPORTING**

2387 Eglinton Ave. E., Suit. 6 (1st Floor)
(Eglinton/Kennedy) Beckers இற்கு மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, இலக்கிய மாத மலர்

# ரோஜா

மலர். 2 இதழ். 8

ஜுன் 15, 95 - ஜுலை 15, 95

ஆசிரியர்.
**வி. எல். ஆனந்த்.**

பிரசுரம்.
**'ரோஜா' பப்ளிக்கேஷன்ஸ்**
**பரடைஸ் அச்சகம்**

விளம்பரம்/விநியோகம்.
**'ரோஜா' பப்ளிக்கேஷன்ஸ்**

வடிவமைப்பு/அச்சமைப்பு
**எல். கிரிஷோத் ரைப்செட்டிங்**

அட்டை வடிவமைப்பு.
**கரன் கிராப்**

அச்சுவேலை.
**எல். கிரிஷோத் ரைப்செட்டிங்**
**பரடைஸ் அச்சகம்**

ஓவியம்.
**கருணா**

**Articles/Advertisements**
**TEL: (416) 425 2884**
**FAX: (416) 425 2625**

**Address:-**

**"ROJAH"**
**F.P.P.O., P.O.BOX 45593,**
**747 DON MILLS RD,**
**DON MILLS,**
**ON. M3C 3S4. CANADA.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ந்த ரோஜா..... - பேசும் ஆசிரியரின் பேனா!.......

# நாடோடிகளாய் வாழ முடியுமா?

1983ம் ஆண்டு ஜுலையில் எமது தமிழினத்தைச் சூழ்ந்த கரு முகில் கூட்டத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். எமது தாய் மண்ணை மீட்பதற்காக தமது உயிரை தியாகம் செய்த போராளி களுக்கும், பொது மக்களுக்கும் எமது இதய அஞ்சலிகள்.

இன்று தமிழீழத்திற்காக எமது பங்களிப்பை காட்ட வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. பழைய பகைகளைக் களைந்து ஒன்று பட்டு செயற்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இன்று இருக்கிறோம். தமிழீழ போராட்டத்திற்கு எதிரான எந்த சக்தியையும் நாம் ஆதரிக்கக் கூடாது. இன்று இலங்கை அரசாங்கம் பல வழி களிலும் நிதியைத் திரட்டி நமது இனத்தை அழிப்பதற்கு மீண் டும் புறப்பட்டிருக்கிறது. பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இந்நிலையில் தமிழ்ப் போராளிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டியது ஈழத் தமிழராகிய எங்களது கடமை. ஒவ்வொரு ஈழத் தமிழர்களும் ஏதோ ஒரு வழியில் பங்களிக்க வேண்டியது இன்றைய கட்டாயமாகின்றது.

நாம் அமைதியை விரும்புபவர்கள். ஆனால் 'ரொறன்ரோவில்' பெருகிவரும் கொலைகள், குழந்தைகள் கடத்தல் போன்றன ஈழத்தமிழர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வன்கூவர் போன்ற இடங்களுக்கு இடம் பெயர நினைக்கிறார்கள் சிலர். ஐரோப்பிய நாடுகளில் வாழ்பவர்கள் தம்மை எப்போது அனுப்புவார்களோ என்ற ஏக்கத்தில் வாழ்கிறார்கள். தமிழீழம் தவிர்ந்த எந்த நாடுமே எமக்கு நிரந்தரமில்லை. நாம் என்றும் நாடோடிகளாகவே வாழ முடியுமா?

**~ வி. எஸ். ஆனந்த்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழமைபோல இந்த ஓவியத்திற்குள் கவிதையொன்று புதைந்துகிடக்கிறது. கவிதை மறு பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பினையே உன்னால் எரிக்கமுடியும்!

நிலா. குகதாசன்

மீண்டுமொருமுறை
சமாதானப் பறவையின்
சிறகுகள் சிதைக்கப்பட்டது!
சுற்றிவர கூறிபார்க்கும்
சுடுகலன்கள் ஒருபுறம்.......
இனவாத எண்ணெயூற்றி
எரியும் தழல்கள் மறுபுறம்......
பாவம் சமாதானப் பறவை!
தலைகீழாய் நிலைமாறி
மூச்சிழுக்கும் நேரத்திலும்
பறக்க முயற்சிக்கிறது!
மனிதருக்கு அங்கென்ன கவலை?...
கண்ணால் பார்க்கவும், காதால் கேட்கவும்
மூச்சுவிடவும் அங்கு முழு உரிமையுண்டு!
வாய் பற்றி யோசித்து வம்பை வளர்க்காதே!
முடிந்தால் மூக்கு வழியாக எப்படி
சாப்பிடலாமென்று முயற்சித்துப் பார்!
நீ இதுவரை பேசிய பேச்சுக்கள்தான்
பெருநெருப்பாய் உன்பின்னே எரிகிறது!
தைக்கப்பட்டது உன் வாயே தவிர
மூளையல்ல!........
நீ மௌனமாக்கப்பட்டவனே தவிர
ஊமையல்ல!.......
மீண்டும் சொல்கிறேன்,
சுடுகலன்களையே உன்னால் சுடமுடியும்!
நெருப்பினையே உன்னால் எரிக்க முடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்கதரிசனத்துடன் அணுகாத பண்டாரநாயக்கா குடும்பம்

மீண்டும் இலங்கையில் யுத்த காண்டம்!

சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்கா தேர்தலில் அமோக வெற்றி பெற்று வெற்றியின் உச்சத்தைத் தொட்ட போது, இன, மத வேறுபாடின்றி நாட்டு மக்கள் அனைவருமே குதூகலித்தனர். நாட்டில் 'சமாதானம்' ஏற்பட்டுவிட்டதாகவே அங்கலாய்த்தனர்.

சமாதான விரும்பியாக தன்னை நாட்டு மக்கள் மத்தியிலும், சர்வதேச அரங்கிலும் வெளிக்காட்டிய சந்திரிகாவின் சுயரூபம் வெளியான போது மக்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

"இதுவரை இலங்கையை ஆண்ட தலைவர்களுக்கு நான் வேறுபட்டவள் அல்ல.... சிங்கள மக்களின் உயர்வு நிலைக்காகவே நான் என்றும் உழைப்பேன்" என்கிறார் சந்திரிகா!

பேச்சு வார்த்தைகள் சமாதான பக்கம் செல்லாமல், இடைநடுவில் முறிவடைந்ததற்கு காரணம், சந்திரிகா அரசின் 'அரை' மனது சமாதானப் போக்கே!

அன்று சந்திரிகாவின் தந்தை, தாயார் செய்த தவறுகளையே இன்று இவரும் தொடர்கின்றார்.

சந்திரிகாவின் தந்தை, தாய் இருவருமே இலங்கையின் பிரதமர்களாக இருந்தவர்கள்.

அவர்கள் இருவருமே நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்கதரிசனத்துடன் அணுகாதவர்கள்.

அன்று அவர்கள் சிந்தனைக்கு இடங்கொடுத்து, நீதியான முறையில் தமது ஆட்சியை செலுத்தியிருந்தால் இன்று நாடு பற்றி எரிவதற்கே இடமில்லை!

மகள் சந்திரிகாவும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் சிக்கித்தவிக்க மாட்டார்.

அரச இயந்திரத்தை எத்திசையால் செலுத்துவது என்பதையறியாது திக்குத் திசை தெரியாது தடுமாறியிருக்க மாட்டார்.



பெற்றோர் விதைத்த விதைகள் இன்று பூதாரமாக வளர்ந்து, பெரும் பூதமாக இன்று சந்திரிகா முன் நிற்கின்றது.

இவரது தந்தை யார் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கையில் செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். இங்கிலாந்தில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு தாய்நாடு திரும்பிய பண்டாரநாயக்காவின் எண்ணமும் இலட்சியமும் நாட்டின் விடுதலையிலும், மக்களின் முன்னேற்றத்திலுமே இருந்தது. குறிப்பாக ஏழை மக்களினதும், விவசாய, தொழிலாள மக்களினதும் பூரண விடுதலையிலும், மாற்றம் மிகுந்த வாழ்க்கை அமைப்பதிலுமே தங்கியிருந்தது. அதனால் அரசியலில் தீவிரமாக இறங்கினர் அவர்!

1927 இல் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அரசியல் பிரவேசம் செய்தார் பண்டாரநாயக்கா.

பின்னர் 1947 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அத்தனகலைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டி பாராளுமன்ற உறுப்பினரானார், மந்திரியானார்.

அதைத் தொடர்ந்து கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, 1951 இல் அமைச்சுப் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.

1952ம் ஆண்டுத் தேர்தலில் இவரது கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிட்டது. ஒன்பது உறுப்பினர்களே தெரிவாகினர்.

அடுத்த தேர்தலில் எப்படியும் ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும் என விரும்பினார் பண்டா. அதற்காக என்ன விலை கொடுக்கவும் ஆயத்தமானார்.

1956ம் ஆண்டு பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் அந்தச் சந்தர்ப்பத்தில் தனது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதில் தீவிர கவனம் செலுத்திய பண்டாரநாயக்கா, இலங்கையிலுள்ள முக்கிய இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சம சமாஜக் கட்சி மற்றும் சோசலிசக் கட்சிகளுடன் உறவை ஏற்படுத்தினார்.

1956ம் ஆண்டுத் தேர்தலில் எப்படியும் ஆட்சி பீடம் ஏறவேண்டும் என்ற வெறியால் செயற்பட்டு ஒவ்வொரு படியாக ஏறிவந்த பண்டாரநாயக்கா, சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியிருந்த ஐக்கிய தேசியக் கட்சியை, வேரோடு எப்படி சாய்க்கலாம், தான் எப்படி பதவிக்கு வரலாம் என தனது மூளைக்கு வேலை கொடுத்தார்.

'குறுக்கு வழி' தேடினார்.
பிறந்தது 'சிங்களம் மட்டும் சட்டம்'

1956ம் ஆண்டுத் தேர்தலில் 'இந்நாட்டு மக்கள் எனது கட்சியை அதிகார பீடம் ஏற வைத்தால்.. 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை அரச மொழியாக்குவேன்......' என அறைகூவி இனவாதத்தைக் கக்கினார்.

இன்று தான் விதைக்கும் இந்த நச்சு விதை நாட்டையே பற்றி எரிய வைக்கும் என்பதை தீர்க்க தரிசனத்துடன் செயற்படாமல் பண்டாரநாயக்கா, தான் விதைத்த விதையாலேயே அழிந்தார்.

எது எப்படியிருப்பினும், சிங்கள மக்களை மயக்கி அதிகார பீடம் ஏறினார் பண்டா.

1956ம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்காவின் அமோக வெற்றிக்குக் காரணமாக இருந்தது 'சிங்களம் மட்டும்' சட்ட மூலமாகும்.

பண்டாரநாயக்கா அரசின் முதலாவது சட்ட மூலமாக, 'சிங்கள மொழி இலங்கையில் உத்தியோக பூர்வமான மொழியாக இருக்கும்' என்ற சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது. 1956 ஜீன் மாதம் 4ம் திகதி கொண்டுவரப்பட்ட இச் சட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவளித்தது.

சிங்களம் மட்டும் சட்ட மூலத்தை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம், ஜுன் 5ம் திகதி நடைபெற்றது.

இச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளை அடுத்து, மொழிக் கொள்கை தொடர்பான விடயங்கள் குறித்துத் தந்தை செல்வாவுடன் அமரர் பண்டாரநாயக்கா பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பின்னணியில் 1957 ஜுலை மாதம் 27ம் திகதி பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த உடன்படிக்கை பண்டா-செல்வா ஒப்பந்தம் என்று பின்னர் பிரபலயமடைந்தது.

இந்த ஒப்பந்தத்தின் படி தமிழ் மொழியை தேசிய சிறுபான்மையினரின் மொழி என்று ஏற்றுக் கொள்வதுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிர்வாக மொழியாக பயன்படுத்துவதென்றும் இணங்கப்பட்டது.

எனினும் துரதிஸ்டவசமாக சிங்கள பேரினவாத சக்திகளின் நெருக்கடி காரணமாக இவ் ஒப்பந்தம் பின்னர் கிழித்தெறியப்பட்டது.

பேரினவாதத்தை விதைத்து பதவிக் கட்டிலில் ஏறிய பண்டாரநாயக்கா, அவர்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் திணறினார்.

தமிழர்கள் கொதிப்படைந்தார்கள். சாத்வீகமான முறையில் போராட்டம் நடத்திய அவர்கள் மேல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

பேரினவாதிகளின் அலையில் சிக்கித் தவித்த பண்டாரநாயக்கா 1959ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி உயிர் துறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரினவாதிகள் அவரது உயிரைப் பறித்துக் கொண்டார்கள். பண்டாரநாயக்காவின் கொலையைத் தொடர்ந்து, அவரது மனைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியல் பிரவேசம் செய்தார்.



சமையலறையிலிருந்து வெளியே வந்த அம்மையார் வகுப்பு வாதத்தைக் கக்கினார். தனது கணவன் கடைப்பிடித்த 'சிங்களம் மட்டும் சட்டம்' என்றும் பாதுகாக்கப்படும் என்று சூழுரைத்தார். பௌத்தம் தேசிய மதம் ஆக்கப்படும் என்று சிங்கள மக்கள் முன் தோன்றி உரத்துக் கூறினார்.

தேர்தலும் வந்தது.
அமோக வெற்றியீட்டினார்.

இவரது ஆட்சிக் காலத்தில் பேரினவாதிகளின் கை மேலோங்கியது. வகுப்பு வாதம் தலைக்கேறிய நிலையில் அரசு இயந்திரம் செயற்பட்டது.

தமிழர்கள் மேல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இராணுவ, பொலிஸ் அட்டூழியங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

பல்கலைக்கழக தரப்படுத்தல் முறை அமுலுக்கு வந்தது.

1961ம் ஆண்டு தமிழர்களின் சாத்வீகப் போராட்டமான சத்தியாக்கிரகம் வன்முறையால் அடக்கப்பட்டது. நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் கொலைக்களமாகியது.

கணவன் இட்ட பேரினவாத வித்தை நீர்ப் பாய்ச்சி வளர்த்தார் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. இவரது ஆட்சிக் காலத்தின் பின் அமைதியாகவிருந்து சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் பற்றி சிந்திக்கத் தலைப்பட்டார்கள். ஆயுதமேந்தினார்கள்.

கால ஓட்டத்தில் அம்மையார் தேர்தலில் படுதோல்வியடைகின்றார். ஜே. ஆர் பதவியைத் தட்டிக் கொண்டு 'கொடுமைகளை' ஆரம்பிக்கின்றார்.

சுமார் 17 வருடங்களுக்குப் பின்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருகின்றது.

இம்முறை ஆட்சியைப் பிடித்துக் கொண்டவர் பண்டாரநாயக்காவின் புதல்வி சந்திரிகா. இவர் ஆட்சியைப் பிடித்துக் கொண்டமைக்கும், இவரது பெற்றோர் ஆட்சி பீடமேறியதற்கும் நிறைந்த வேறுபாடுகள்.



பேரினவாதம் பேசிப் பதவிக்கு வந்தவர்கள் சந்திரிகாவின் பெற்றோர். ஆனால் சமாதானம்....... சமாதானம்.... என்று அலறியபடி ஜனாதிபதியானவர் சந்திரிகா.

சந்திரிகா ஜனாதிபதியானதும் இன, மத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடின்றி நாட்டு மக்கள் எல்லோரும் திருப்தி கொண்டார்கள்.

சமாதானம் கிட்டிவிட்டதாகவே குதூகலம் கொண்டார்கள்!

தனது பெற்றோரின் கறைகளையும் மகள் துடைக்கப் போகின்றார் என சமாதான விரும்பிகள் பெருமகிழ்வு கொண்டனர்.

ஆனால் எல்லாமே நொடிப் பொழுதில் மாறிவிட்டன.

தந்தை, தாயார் செய்த அதே தவறுகளையே சந்திரிகாவும் செய்து வருகின்றார்.

அன்று பண்டாரநாயக்காவின் 'சிங்களம் மட்டும் சட்டம்' சிந்தனைக்கு இடம் கொடுக்கும் சமாதான விரும்பிகளால் பரிகசிக்கப்படுவது போல்-

திருமதி. பண்டாரநாயக்காவின் 'பல்கலைக்கழகத் தரப்படுத்தல்' முறைகள் படித்தவர்களின் சிரிப்புக்குள்ளாவதைப் போல்-

சந்திரிகாவின் இன்றைய அணுகுமுறைகள், பேரின வாதிகளுக்கும் வன்முறையாளர்களுக்குமே தீனியாக அமைகின்றன.

தனது தந்தை, தாயார் செய்த தவறுகளை மனதில் நிறுத்தி அலசி ஆராய்ந்து யுத்த காண்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பாரா சந்திரிகா?

சீர்குலைந்து போயிருக்கும் நாட்டை சீர்ப்படுத்தி ஐக்கயத்தை உருவாக்கும் பாரிய பணியை செய்ய முயற்சிப்பாரா எமது ஜனாதிபதி.

ஆணவம், அகம்பாவம், விட்டுக் கொடுக்காத தன்மை, பிடிவாதப் போக்கு ஆகியனவையே இலங்கையின் முன்னைய தலைவர்கள் இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்க முடியாமல் போனதற்கு காரணங்கள்.

பேரினவாதிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து 'ஆமாம்' போட்டு ஆட்சி செலுத்தாமல், பரந்த மனப்பாண்மையோடு, தேர்தலில் மக்கள் தந்த ஆணையை நிறைவேற்ற சந்திரிகா முன்வரவேண்டும்.

அந்த நம்பிக்கை வீண்போகக் கூடாது என்பதுவே எமது விருப்பம்.

சந்திரிகாவின் உறுதியான சமாதான நடவடிக்கைகளின் நல்ல முயற்சிகளை உலகம் நம்பிக்கையோடு எதிர்நோக்குகின்றது. அவரது நடவடிக்கைகள் இவரது பெற்றோரின், 'கறை'களையும் மறைத்து விடலாம்.

இன்னும் சந்தர்ப்பம் உண்டு.

★★★★★

அமெரிக்கா சோதிட சம்மேளனத்தின் ஜோதிட கலாநிதி பட்டம் பெற்ற பிரபல ஜோதிடர் திரு. ஜெயா கந்தையா அவர்களைப் பாராட்டுவதில் பூரிப்பும் உவகையுமடைகிறோம்.

யோகா சோதிடம்

தொலைபேசி: 416 299 8361
தொலைநகல்: 416 299 6539



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

## 4. திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள்

திரு. இராஜ அரியரத்தினம் அவர்களை எனது சிறு பராஜத்திலிருந்தே நான் நன்கு அறிவேன். அப்பொழுது அவர் பிரபல வெளியீட்டாளரும் திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை ஆகிய தாபனங்களின் உரிமையாளரும் ஆகிய திரு. நா. பொன்னையா அவர்கள் நடத்திய 'ஈழகேசரி' பத்திரிகை ஆசிரிய ராக இருந்தார். எனது தமையனார் திரு. வி. பசுபதி அவர்கள் திருமகள் அழுத்த கத்தில் பணிபுரிந்த காரணத்தினால் ஞாயிறு தோறும் 'ஈழகேசரி' எனக்கு ஒழுங்காக வந்து சேரும். இறிபேக் கல்லூ ரியில் படிக்கின்ற பொழுது 'ஈழகேசரி' பாலர் பகுதிக்கு எழுதத் தொடங்கி விட்டேன். எனது முதற் கட்டுரை 'ஒரு கால் மூன்று தலை' ஈழகேசரியிலே வெளிவந்தது.

1950ல் ஈழகேசரி நடத்திய ஒரு கட்டுரைப் போட்டியில் எனக்கு முதலிடம் கிடைத் தது. அகிலனின் நூல்கள் பரிசாகக் கிடைத்தன. இதனைத் தொடர்ந்து திரு. இராஜ அரியரத்தினம் அவர்களது பார்வை என்மீது விழலாயிற்று.

சாவகச்சேரிப் பட்டிணத்தில் இவரது வீடு. என்னைக் கண்டதும் முகம் மலரத் தமக்கையாருக்குத் தந்தி கொடுப்பார். 'அக்கா கந்தவனம் வந்திருக்கு.' அப்படி என்றால் 'தேநீர் கொண்டுவா' என்று அர்த்தம். தேநீர் வருவதற்கிடையில், சுண்ணாகத்திலிருந்து கொண்டுவந்த காகிதக் கட்டை கொண்டுவந்து தருவார். அவை பத்திரிகைப் பிரசுரத்திற்கென அனுப்பப்பட்ட ஆக்கங்கள். நான் கடிதங் களை உடைத்து கட்டுரைகளையும் கதைகளையும் வேறுபடுத்தி வைப்பேன். கவிதைகள் இரண்டொன்றுதான் இருக்கும். தேநீர் அருந்திய பின் தெரிவுப் படலம் தொடங்கும். நான் ஒவ்வொன்றையும் உரக்க வாசித்துக் கொண்டிருக்க அவர் உற்றுக் கேட்டுக் கொண்டிருப்பார். சிலவற்றைக் கையில் வாங்கிக் கொண்டு மற்றையவற்றைக் கிழித்தெறியச் சொல்வார்.

இது ஒவ்வொரு சந்திப்பிலும் நடைபெற்ற தொன்றல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவ்வார வெளியீடுகளில் இடம்பெற்ற ஆக்கப்படைப்புக்கள் பற்றிய விமர்சனங்களே இடம்பெறும். அவர் கல்கியில் தொடங்குவார்; நான் வீரகேசரியில் முடிப்பேன். சில சமயங்களில் தான் அடுத்தவார 'ஈழகேசரி' இதழுக்கு எழுதிய தலையங்கத்தை வாசித்துக் காட்டுவார். இவருடன் உரையாடிவிட்டுச் செல்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல நூல்களைப் படித்து முடித்தவோர் உணர்வில் நான் பூரிப்படைவேன்.

1954ம் ஆண்டு நான் தமிழ் நாட்டுக்குப் படிக்கச் சென்றேன். 'தமிழ் நாட்டுக் கலை இலக்கியச் சூழல் உனது ஆற்றலை வளர்க்கும். நன்கு படித்து நீ முன்னேற வேண்டும்' என்று ஆசீர்வதித்து அனுப்பி னார் திரு. இராஜ அரியரத்தினம் அவர் கள். கல்கி, ஆனந்தவிகடன், சரஸ்வதி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக் குக் கடிதந் தந்து என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அப்பொழுது 'ஈழகேசரி' பத்திரிகை தமிழ் நாட்டில் மிகவும் பிரபல்யம். 'இலங்கை எங்கே கொழும்பிலா இருக்கிறது?' என்று கேட்ப வர்களும் ஈழகேசரிப் பத்திரிகையையும் அதன் ஆசிரியர் இராஜ அரியரத்தினம் பற்றியும் அறிந்திருந்தார்கள். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜ அரியரத்தினத்தின் எழுத்தாற்றலைப் பற்றி புகழ்ந்து கூறும் பொழுது எனக்குப் பெருமையாக இருக்கும்.

விடுமுறைக் காலத்தில் அடிக்கடி இவரைச் சந்திப்பது எனக்குப் பொழுது போக்காக இருந்தது. இலக்கியம் மட்டுமல்லாது அரசியல், சமூகப் பிரச்சனைகள் பற்றிய பேச்சுக்களும் எழும். நான் தமிழரசுக் கட்சி சார்புடையவன் என்று தெரிந்தும் தமிழரசுக் கட்சிக் குறைபாடுகளை எடுத்துச் சொல்வார். தமிழரசுக் கட்சியிடம் தகுந்த பொருளாதாரத் திட்டம் இல்லையென்பது அவரது கருத்து. அவர் திரு. ஜான்டி பேரின்பநாயகம், திரு. நா. பொன்னையா கூட்டத்தைச் சேர்ந்தவர். அவர்கள் தமிழ்ப் பகுதியில் இலங்கா சமசமாசக் கட்சிக் கொள்கைகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஒருமுறை 'சுத்தம் சுகம் தரும்' என்ற நூல் ஒன்றை தான் எழுத இருப்பதாகக் கூறி அதன் பொருளடக்க விவரங்களை எனக்கு விளக்கினார். அதற்கு ஆதாரமாகத் தான் சேர்த்து வைத்திருந்த ஆங்கிலக் கட்டுரைகளையும் பத்திரிகைத் துண்டுகளையும் காட்டினார். எனினும் பின்பு அப்படி ஒரு நூலை அவர் வெளியிட்டதாக எனக்குத் தெரியவில்லை.

1956க்கும் 1958க்குமிடையில் நான் பல சுதந்திரப் பாடல்கள் பாடியிருக்கிறேன். அவற்றையெல்லாம் 1958ல் தொகுத்து "தலைநிமிர்ந்து நில்லடா" என்ற தலைப்பில் வெளியிடும் நோக்குடன் திரு. அரியரத்தினம் அவர்களுடைய பார்வைக்கு வைத்து முன்னுரை எழுதித் தரும்படி கேட்டிருந்தேன். அதில் ஒரு பாடல் இப்படி வரும்"

எச்சில் துப்பிச் சிங்களர்க்கிங்(கு)
எச்சரிக்கை செய்கின்றோம்
அச்சமில்லை நாங்கள் யார்க்கும்
அடிமை யான தில்லையாம்
இச்சகத்தில் எவரும் காண
ஈழத்தமிழர் கொடியினை
உச்சவானில் முச்சை கட்டி
ஒன்றுகூடி விடுவமே!

அவர் முன்னுரை எழுதவுமில்லை. கையெழுத்துப் பிரதியை திருப்பித் தரவுமில்லை. 'இவை எல்லாமே அரசாங்கத்துக்கு எதிரான பாடல்கள். வெளியிலே விட்டால் ஆபத்து. நீ வளர வேண்டியவன். பொலிஸில் சிக்கித் தவிக்கலாகாது. சமயம் வரும்போது பார்த்துச் செய்வோம்' என்ற பொருளில் அறிவுரை கூறினார்.

எனது முதற் கவிதை நூல் முயற்சி இவ்விதம் முற்றுப்பெற்றமை குறித்து எனக்குக் கவலையாகவே இருந்தது. நான் நூலை வெளியிடத் துணிந்தது 1958ல் நடந்த கலவரக் காலத்தில். அதனால் பொலிஸாரால் எனக்கு ஆபத்து வருமென அவர் நினைத்ததில் தவறில்லை. மற்றும்படி அவர் N. M. பெரேரா கட்சி ஆதரவாளர் என்றமையால் தமிழரசுக் கட்சி கொள்கை சார்ந்த பாடல்கள் வெளிவருவதை அவர் விரும்பவில்லையென்று அப்பொழுது என் நண்பர்கள் சொன்ன கருத்துக்களை நான் நம்பவில்லை. காரணம், பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் முறிவுற்றபோது நான் பாடிய போர்முழக்கப் பாடலை அவர் ஈழகேசரியில் வெளியிட்டிருக்கின்றார்.

ஆனது கண்டியோ நீ தமிழா- அட
அன்று நடந்தது குன்றியது
போனது போகட்டும் போதுமினி- உடன்
பொங்கிஎழு பெருஞ் சேனையென

என்பது அக்கவிதையின் ஒரு பகுதி. அதுவே ஈழகேசரியில் வெளியான முதற் போர் முழக்கக் கவிதை என்று நினைக்கின்றேன்.

'பொங்கிஎழு பெருஞ் சேனையென' என்று பாடுவது மிகவும் சுலபம் கந்தவனம். அப்படி எழுந்தால் தமிழர் பிரச்சனை தீருமென நீ நினைக்கிறாய். தமிழன் அப்படி பொங்கி எழப் போவதுமில்லை, எமது பிரச்சனை அவ்வளவு சுலபமாக தீரப் போவதுமில்லை' என்று அந்தப் பாடலைப் பற்றிச் செய்த விமர்சன முடிவில் கூறினார். அவரின் தீர்க்க தரிசன விளக்கத்தை விளங்கிக் கொள்ளக் கூடிய பக்குவம் எனக்கு அப்பொழுது இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் வெறும் உணர்ச்சி பூர்வமாக இல்லாது அறிவு விசாரணை நடத்து பவையாகவும் இருத்தல் வேண்டும் என்ற கருத்தை எனக்குப் பலமுறை வலியுறுத்தி யிருக்கின்றார். இதன் விளைவை பிற் காலத்தில் எனது 'இலக்கிய உலகம்', 'பாடுமனமே' ஆகிய கவிதை நூல்களில் கண்டு மகிழ்ந்துமிருக்கின்றார். 1964ம் ஆண்டு குரும்பசிட்டியில் நடைபெற்ற 'இலக்கிய உலகம்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு, 'இலக்கியம் என்றால் என்ன என்றவோர் ஆராய்ச்சி யைப் பாடலாலேயே நடத்தியிருக்கின்றார் கந்தவனம்' எனப் பாராட்டுரை வழங்கி னார். பதிலுரை வழங்கியபோது 'அவரே எனது இலக்கிய உலகக் குரு' எனப் பலரும் அறியப் பிரகடனஞ் செய்தேன்.

திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள் பொதுவாக உணர்ச்சிவசப் படுவதில்லை. கவலைகள் இருப்பினும் வெளிக்காட்ட மாட்டார். ஆயினும் 'கல்கி' இறந்த பொழுது கவலையை அவரால் அடக்க முடியவில்லை. இருவரும் நெருங்கிய நண்பர்கள். கல்கியின் மறைவையொட்டி ஈழகேசரியில் இவர் எழுதிய 'கல்கி பிறந்தார்' என்ற கட்டுரைத் தொடர் கல்கியின் பெருமையை எடுத்துக் காட்டிய முன்மாதிரியான முயற்சியாகும். தொடர் முடிவுற்றதும் 'கல்கி' நிறுவனம் அதனை நூலாக வெளியிட்டது.

இவர் கவலைப்பட்ட மற்றொரு சந்தர்ப்பம் 'ஈழகேசரி' அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் மறைவுற்ற காலம். அவரது மறைவுக்குப் பின் ஈழகேசரிப் பத்திரிகை யின் எதிர்காலம் கேள்விக் குறியாயிற்று. சில ஆண்டுகளின் பின் 'ஈழம்' என்ற நாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ் கூறும் நல்லுலகெங்கனும் வாரந் தோறும் வீறுநடைபோட்ட அந்த அருந் தமிழ்ப் பத்திரிகை அடக்கம் கண்டது.

வேலையிழந்திருந்த திரு. அரியரத்தினம் அவர்களைக் காணச் சென்றிருந்தேன். பொன்னையரின் பெருந்தன்மை, அஞ்சா நெஞ்சம், எண்ணித் துணியும் இயல்பு, இலட்சிய நோக்குப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறி 'ஈழகேசரி' நிறுத்தப் பட்டதால் நேர்ந்த தன் கவலையை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் வெளிவரவிருக்கும் புதியவொரு நாளிதழுக்கு திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள் ஆசிரியராகப் போகும் காலத்தில் நடந்த ஒரு சந்திப் பில், புதிய பத்திரிகைக்குப் பெயர் என்ன வைக்கப் போகின்றீர்கள் எனக் கேட்டேன். 'ஈழமணி' என்றார். 'ஈழநாடு' பொருத்த மாக இருக்கும் என்று வலியுறுத்தினேன். இரண்டு மாதம் கழிந்து 'ஈழநாடு' வெளிவந்த போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

திரு. இராஜ அரியரத்தினம், பத்திரிகை ஆசிரியனுக்குப் பங்கமில்லாச் சுதந்திரம் இருக்க வேண்டுமென்ற கொள்கை யுள்ளவர். அத்தகைய சுதந்திரத்தை ஈழகேசரியில் ஆசிரியராக இருந்த காலத் தில் முழுதாக அனுபவித்தார். ஈழகேசரித் தாபகர் திரு. பொன்னையா அவர்கள் அதற்குக் காரணமாக இருந்தார். 'ஈழநாடு' இதழுக்கு ஆசிரியாராக இருக்கையில் ஆசிரிய சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது. அதனை எதிர்த்துப் பதவியைத் துறப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

'சிந்தாமணி' ஆசிரியாராக இருந்த பொழுது கொழும்பில் அவரைக் காண அவரது அலுவலகத்துக்குச் சென்றிருந் தேன். அழைத்துச் சென்று புதிய அச்சக வசதிகளை காட்டி மகிழ்ந்தார்.

திரு. இராஜ அரியரத்தினம் உயரமாக, சிவப்பாக, அழகாக இருப்பார். அவரது தோற்றத்தைப் போலவே அவரது உள்ள மும் உயர்ந்தது; செம்மையானது; பண் பட்டது. அகத்தின் அழகை முகம் எந்த நேரமும் காட்டியவாறே இருக்கும். சிரித் தால் நிலவு எறிக்கும். அந்த நிலவில் நான் மட்டுமன்றி, எத்தனையோ பல எழுத்தாளர்கள் இலக்கிய இன்பம் அனுப வித்திருக்கிறார்கள்.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவிரல் தந்த பாடம்




ராசுக்குட்டியர்!
ராசுக்குட்டியர்!

என்ன நடுவிரலை அம்மன் கோவில் பந்தம் மாதிரி சுத்திக் கொண்டு வாறியள் எலிவேற்றரால் இறங்கி வந்த ராசுக்குட்டி யரிடம் கேட்டார் முருகேசர்.

அக்கம் பக்கம் பார்த்த ராசுக்குட்டியர், தொடர்ந்து யோவ் முருகேசு! பக்கங் களிலை சோறு நிக்கிதுகள் அங்காலை வா சொல்லுறன் (சோறு என்பது தமிழர் என்பதற்கு ராசுக்குட்டியரும், முருகேசரும் வைத்திருக்கும் Code Word என்றாலும் சரி அடைமொழி என்றாலும் சரி அவர் களுக்குத்தான் வெளிச்சம்)

முருகேசரை வெளியே இழுத்துக்கொண்டு சென்ற ராசுக்குட்டியர் "முருகேசு நான் கனடாவுக்கு வந்து இரண்டு வருஷம் கண்டியோ கனக்க படிக்க கிடக்கு" என்றவரை என்ன? என்ன நடந்தது என ஆவலாகக் கேட்டார் முருகேசர்.

"இல்லை........ என்று இழுத்த ராசுக்குட்டி யர் எட இஞ்ச பார் என்ரை நடுவிரலை மூண்டு இழை போட்டு விட்டாங்கள். மேல் துண்டு இல்லை இனி நாலரை விரல்தான் ஒரு கையில எனக்கு

ஏன் கத்தி வெட்டிப் போட்டுதோ இறைச்சி வெட்டேக்கை...... என்று இழுத்த முருகே சரை இடைமறித்த ராசுக்குட்டியர் "எட நீ வேறை இஞ்சை! என்ரை விஷயங்களை உனக்கு ஒருத்தனுக்குத்தான் சொல்லுற னான் கண்டியோ வெளியாலை விட்டி டாதை மானக்கேடு. மற்றவர்களுக்கு ஏன் வள்ளியம்மைக்குக் கூட இறைச்சி வெட் டேக்கைவெட்டுப்பட்டதா இருக்கட்டும். உனக்கு ஏன் சொல்லுறன் எண்டா இது ஏன் நடந்தது எண்டு எனக்கு மனசுக்கை இரண்டு நாளா கிடந்து அரிச்சுக் கொண்டு கிடக்கு அதுதான் உன்னட்டை மட்டும் சொல்லுறன் என்றவரை; சொல்லுங்கோ என ஆவலாகக் கேட்டார் முருகேசர்!

எட அதிகமா என்ரை பொடியனோடை காரிலை முன்னுக்கு இருந்து போறனான் உனக்கு தெரியும் தானே. எட முன்னுக் குப் போறவன் ஏதாவது பிழையா காரை ஓட்டினா பின்னுக்கு வாறவனுக்கு விசர் வாறது வழக்கம்தானே. அவன் 'கோண்' அடிப்பான். எட நான் விட்டது பிழை தானே எண்டு முன்னுக்குப் போறவன் நினைக்காமல் அவனும் 'கோண்' அடித் துத் தன்ரை ஆத்திரத்தைத் தீர்ப்பான்....

அது சரி ராசுக்குட்டியர் அதுக்கும் உங் கடை கை விரலுக்கும் என்ன சம்பந்தம் என்று ராசுக்குட்டியரை அவசரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
# &
# BST INSURANCE BROKERS
## சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



**A.Veluppillai**
**(Life Consultant & Insurance Broker)**
**காப்புறுதி ஆலோசகர்**

வாகனம், நெருப்பு, வீடு,
குத்தகைக்காரர், படகு,
தொழிற்சாலை, விபத்து, கடன்,
தனிப்பட்ட, மூலதனம்,
கல்வித்திட்டம், வாழ்க்கை,
சுகாதாரம், வர்த்தகம், வலது
குறைந்தோர், பிரயாணம்,
அடமானம், பணம் மீழல்,
வாழ்க்கை முழுவதும் காப்புறுதி
தவணை வாழ்க்கை காப்புறுதி,
குறிப்பிட்ட கால காப்புறுதி,
குடும்ப காப்புறுதி,
குறுகிய கால பணம் செலுத்தல்

Nine continuous years in Canadian Insurance Industry
Life Section - Under International Insurance Property Section- Under BST Insurance
கனடாவில் 9வருட காப்புறுதி அனுபவமுள்ள ஆலோசகர் எப்பொழுதும் சிறந்த தேவைகள் உங்களுக்குண்டு. சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

*அழையுங்கள்:-*

**Tel: (416) 755-4849**
**Fax: (416) 755-8449**

**2425 Eglinton Ave. E.,**
**Suite. 217, Scarborough, Ont. M1K 5G8**

We represent oldest, largest, leading, well managed mutual and stock insurance companies.
We shop around, the BEST for our client's needs, Affordability, and choice.

**We arrange all types of Insurance**

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

**ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.**

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**

# YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

**Photocopying & Fax Services**

Tel/Fax: (416) 445-5352
Tel: (416) 445-5763

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



# யாழ்ரன் மார்க்கற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினார் முருகேசர்.

எட அவதிப்படாதை சம்பந்தம் இருக்கிற படியால் தானே சொல்லிக் கொண்டு வாறன் என்ற ராசுக்குட்டியர் தொடர்ந்து.

பிறகு பின்னுக்கு வாற கார்க் காரன் முன்னுக்குப் போறவனிட்டை மன்னிச்சுக் கொள் எண்டிறதுக்கு பதிலா கையை தூக்கி நடுவிரலை காட்டுவான் போல பதிலுக்கு இவனும் காட்டுவான் போல இரண்டு பேரும் சமாதானமா போயிடு வாங்கள் இல்லாட்டி இறங்கி மன்னிப்பு கேக்க முடியுமே சரி....சரி அதை விடு முருகேசு என்ரை விசையத்துக்கு வாறன் என்றவர் தன் கையை அசைத்தபடி தொடர்ந்தார். நேற்று காலமை வள்ளி அம்மை சொல்லிச்சு முருங்கக்கா பாண் சுட சுட இருக்கும் அப்பா வாங்கிவாங்கோ எண்டு, என்ற ராசுக்குட்டியரை இடைமறித்த முருகேசர் அது என்ன முருங்கைக்கா பாண் புதுசா கிடக்கு எண்டவரை

எட நீ நாலு வருஷம் கனடா வந்து இதை தெரியாமல் இருக்கிறதா இந்த பாண் தமிழ் கடையளிலை கிடவாது முருகேசு! வெள்ளையன் தான் வைச்சிருக்கிறான். நெடுவலா எங்கடை சாத்திரி சரவணை மாதிரி உயரமான பாண் கண்டியே அப்பிடியே ஒரு முழம். அதிலை இரண்டை வாங்கி கொண்டு பிளமண்டன் பாக்காலை றோட்டைக் கடப்பம் எண்டு வந் தன் நடைபாதையிலை சிவத்த கைபோட்ட லைற்று வராதை எண்டு சமிஞ்சை காட்டினது தான்; நான் உந்த பாணை வாயிலை வைச்சபடி வந்ததிலை உதை கவனிக்க இல்லை பார். கடந்தன்! எட! ஒரு கார் 'சடார்' எண்டு பிறேக் போட்டிச்சு எனக்கு நெஞ்சு படக் படக் எண்டு அடிச்சுது கண்டியே நல்ல காலம் தப்பிவிட்டன். சரி ஒரு மாதிரி சமாளிச்சுப் போட்டன். காருக்கை ஒரு கறுப்பிதான் ஓட்டி வந்தவள். என்னிலை தானே பிழை எண்டு அவளிட்டை மன்னிப்புக் கேப்பம் எண்டு நினைச்சு கொண்டு ஒரு கையிலை சரவணை பாணை வைச்சு கொண்டு மற்ற கையாலை நடு விரலை தூக்கிக் காட்டினன். எடி பாவி என்ன நினைச்சாளோ தெரியாது காரை கரையிலை நிப்பாட்டிப் போட்டு ஏ மான்! எண்டு கத்தி கொண்டு வந்து என்ரை கையைப் பிடிச்சு இனி இது இருந்தா தானே மற்றவைக்கும் இதை தூக்கிக் காட்டுவா எண்டு போட்டு என்ரை கையை இழுத்து நடுவிரலை மடக்கி இரண்டா நெட்டி முறிச்சு பாதியை எடுத்துக் கொண்டு போட்டாள் முருகேசு என பரிதாபமா தன் கையை காட்டியபடி கூறினார் ராசுக்குட்டியர்.

ராசுக்குட்டியர் இது என்ன இந்த நாசம் வெளிநாடு பாருங்கோ? எங்களுக்கு, தமிழனான நாங்கள் சொந்த நாட்டிலும் வெளிநாட்டுக்காரர் மாதிரித்தான், கையை காலை கொஞ்சம் மடக்கித்தான் வைச்சிருக்க வேணும் என்ற முருகேசர் தொடர்ந்து ஒவ்வொரு நாடுகளிலும் அவனவனுக்கு எண்டு பாசையளும் சமிஞ்சைகள், சேட்டை சமிஞையள் எண்டு இருக்கும் அதுபோலத்தான் இதுவும் கண்டதையும் எதை எதுக்கு எண்டு புரிஞ்சு கொண்டு செய்யவேணும் ராசுக்குட்டியர். இதுவும் அப்பிடிப்பட்ட சேட்டை சமிஞ்ஞைதான் சரி..... சரி..... விடுங்கோ....... கண்டதுக்கும் கையை தூக்கினா ஊரிலை அடிபிடி இஞ்சை விரலை தூக்கினாலே ஆபத்து, ஏன் எண்டா இது பெரிய ஒரு வல்லரசு நாடு.

இஞ்சை முருகேசு ஆனந்தன் எனக்கு பின்னாலை வந்தவன். அவன் கறுப்பி போன பிறகு தான் வந்தவன் என்ன.... என்ன......... எண்டு ஓடி வந்தவன் வந்து கேட்டவன் என்ன அப்பு என்ன நடந்தது எண்டு; நான் சொன்னன் விழுந்து கை விரல் மடங்கிப் போட்டுது காரிலை போனவள் கண்டு போட்டு விசாரிச்சு டாக்டரிட்ட போ எண்டு சொல்லிப் போட்டு போறாள் எண்டு சொன்னனான் அவன் பார்த்தியளே கனடியன் எவ்வளவு நல்லவன் எண்டு கறுப்பிக்கு புகள் வேற பாடிப்போட்டு போறான். அப்ப நடந்தது எல்லாத்தையும் இவனிட்டை சொல்லியிருந்தா கனடா முழுக்க பறை தட்டி சொல்லியிருப்பான் கண்டியே. இஞ்சை இது ரகசியமா உனக்கும் எனக்கும் மட்டும் இருக்கட்டும் வெளியாலை விட்டிடாதை நான் வாறன் என்ற ராசுக்குட்டியர் விரைந்து சென்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் மக்களுக்கோர் பணிவான வேண்டுகோள்

ஈழத்தில் நடைபெறும் போர்ச்சூழல் காரணமாக நாம் புலம் பெயர்ந்தோம். ஆனால் எம் ஈழநாட்டில் அடிக்கடி ஏற்படும் வன்செயல்களால் பாதிப்புற்று அனாதைகளாக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகள் ஏராளம். உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி வாடும் இவர்களுக்கு உதவும் இல்லங்கள் ஆங்காங்கே உருவாகியுள்ளதும் நாமறிந்ததே! இதுபோன்ற இல்லங்களில் ஒன்றுதான் 'அன்பு இல்லம்'. திருகோணமலையில் அமைந்துள்ள மேற்படி இல்லத்தில் 153க்கும் அதிகமான அனாதைக் குழந்தைகள் உள்ளனர். இவர்களில் அநேகமானோர் பெண்குழந்தைகள். தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவே அல்லலுறும் இவர்களின் நிலை மிகப் பரிதாபகரமானது.

அன்பு இல்லக் குழந்தைகளின் தொடர்வாழ்வுக்கு உதவுமுகமாக நாம் 'அன்பரங்கம்' என்னும் பெயரில் ஒரு கலைநிகழ்ச்சியொன்றை எதிர்வரும் ஜுலை மாதம் 15ம் திகதி சனிக்கிழமை நடத்தி அதன் மூலம் வரும் உதவித் தொகையை அன்பு இல்லத்திற்கு அனுப்பலாமென முடிவு செய்தோம். மேற்படி முடிவை கடந்த பெப்ரவரி மாத இறுதிப் பகுதியிலிருந்து இங்குள்ள தொடர்புச் சாதனங்கள் வழியாக அறிவிப்புகளும் செய்தோம். இந்நிலையில் மேற்படி 15ம், 16ம் திகதிகளில் பிரபல பின்னணிப் பாடகர் K. J. ஜேசுதாஸ், மற்றும் சித்ரா குழுவினரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதைப் பார்தவுடன் அந்த நிகழ்ச்சி அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு எமது நிலையையும், ஒரு நல்ல நோக்கத்திற்காக நாம் செய்யவுள்ள கலை நிகழ்ச்சியையும் விளக்கி ஜேசுதாஸ் அவர்களின் நிகழ்ச்சியைப் பின்போடுமாறு கேட்ட பொழுது அவர்கள் மறுக்கவே அதற்கு மாற்றீடாக ஜுலை 15ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜேசுதாஸ் குழுவினரின் தனித் தமிழ் நிகழ்ச்சியை மறுநாள் 16ம் திகதி ஞாயிறு அன்றும், மறுநாள் நடைபெறவுள்ள பலமொழி நிகழ்ச்சியை ஜுலை 15ம் திகதிக்கும் மாற்றுமாறும் கேட்டோம். அதற்கும் அவர்களிடமிருந்து மறுப்பே பதிலாக வந்தது.

இந்நிலையில் மேற்படி அமைப்பாளர்களிடம் ஈழநாட்டிலுள்ள அநாதை இல்லமொன்றிற்கு ஏதாவது உதவ முடியுமா என்று கேட்டோம். ஏனெனில் இங்கு நடைபெறும் தென்னிந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளனைத்தும் ஈழத் தமிழர்களின் ஆதரவுடனேயே நடைபெறுகின்றன. எனவே இது போன்ற நல்ல காரியங்களுக்கு உதவுவதில் தப்பில்லையே! ஆனால் அதற்கு அவர்கள் நிகழ்ச்சிக்கான அனுமதிச் சீட்டுக்களில் ஆகக் குறைந்தது ஆயிரம் சீட்டுக்களாவது உறுதி கூறி விற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறு விற்றுக் கொடுத்தால் சுமார் 3000 கனடிய டொலர்கள் வரை தரலாமென்றும் சொன்னார்கள். இந்த ஏற்பாடு சரியானதா என்பது பற்றி நீங்கள் சிந்தியுங்கள்! (அனுமதிச் சீட்டுக்களின் விலை $25, $40)

இந்நிலையில் நாம் இதுபற்றி இங்குள்ள தொடர்புச் சாதனங்கள் வழியாக பொது மக்களிக்கு அறியத் தருவோமென்றும், இதனால் எதிர்காலத்தில் இங்கு வருகை தரவுள்ள தென்னிந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் பின்னடையலாமென்று கூறியும் இதுவரை எவ்விதமான பதிலுமில்லை.

எனவே அன்பு நெஞ்சங்களே! நாம் நடத்தவுள்ள 'அன்பரங்கம்' கலைவிழாவிற்கு நீங்கள் தரும் பத்து டொலர்களும் ஈழத்தில் அன்றாடம் உணவுக்காக அல்லலுறும் எமது தமிழ்க் குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றப் போகிறது. அன்பரங்கத்திற்கு ஆதரவு தருவதன் மூலம் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு நல்லதொரு எதிர்காலத்தைக் கொடுங்கள். தாய், தந்தையரை இழந்து அநாதைகளாய் அழிந்து கொண்டிருக்கும் பிஞ்சு உள்ளங்களுக்கு ஆறுதலளிப்போம்.

தமிழ் வர்த்தகப் பெருமக்களே! எமது மண்ணில் கண்ணீர் சிந்தும் சின்னக் குழந்தைகளுக்காக உதவுங்கள்! உங்கள் ஒன்றுபட்ட ஒத்துழைப்பின் மூலம் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள்! இறுதியாக ஒரு வார்த்தை. நாம் தென்னிந்தியக் கலைஞர்களின் எதிரிகளல்ல. ஆனால் எமது உள்ளூர் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை ஆதரிப்பதன் மூலம் எமக்கென்று ஒரு கலைவடிவத்தை உருவாக்குவோம்.

நன்றி

தொடர்புகளுக்கு:- இளையநிலா (905) 472-6976
ரோஜா (416) 425-2884
ஹரன் கிராப் (905) 277-6813



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டாவா நகரில் 4,000 ஈழத்தமிழர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்!

ஜூன் மாதம் 5ம் திகதி திங்கட் கிழமை ஒட்டாவா நகரில் ஈழத்தமிழர் களினால் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட்டது. சிறீலங்கா அரசாங்கத் துக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடை யிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டு ஒரு போர்ச் சூழல் தோன்றியுள்ளது.

பொருளாதாரத் தடை மீண்டும் அமுல் செய்யப்பட்டுள்ளதோடு ஆயுத் தளபாடங்களைக் கொள்ளனவு செய் வதிலும் சிறீலங்கா அரசு முனைப்புடன் செயல்பட்டு வரும் இந்தக் கால கட்டத் தில், இனவாத அரசின் கபட நாட கத்தை சர்வதேச அரங்கில் அம்பலப் படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும்.

இதைக் கருத்திற் கொண்டு ரொறன்ரோவிலிருந்து 23 பஸ் வண்டி களிலும், மொன்றியாலிலிருந்து 18 பஸ் வண்டிகளிலும் ஏனைய பாகங்களி லிருந்தும் தம் சொந்தக் கார்களிலும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காலை 11 மணியளவில் ஒட்டாவா பாராளுமன்றத்திற்கு முன் கூடினர்.

"அமைதி வேண்டும் அது நீதி யானதாக இருக்க வேண்டும்" "எங்கள் நாடு தமிழீழம்", "எங்கள் தலைவர் பிரபாகரன்" "தமிழீழத்தை அங்கீகரி" போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கியும் கோஷமெழுப்பியும் தங்கள் இன விடுதலை வேட்கையை தமிழர்கள் வெளிப்படுத்தினர்.

கனடிய தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம், கனடிய தமிழ் மக்களின் சார்பில் கனடிய பாராளுமன்ற உபசபா-நாயகர் டேவிட்கில் கூர் அவர்களிடம் ஒரு மகஜரைக் கையளித்தது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட ஊபசபாநாயகர் தனது 17 வருட அனு பவத்தில் இப்படியான ஒரு ஊர்வலத் தைத் தான் கண்டதில்லை என்று பேசினார். மேலும் இந்த விடயத்தை பிரதமரினதும், வெளிவிவகார அமைச் சினதும் கவனத்திற்குக் கொண்டு வருவேன் என்றும் கூறினார்.

தமிழீழ சங்கச் செயளாலர் S. சிற்றம்பலம் அவருக்கு நன்றி தெரி வித்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். அதையடுத்து ஊர்வலம் வெளிவிவகார அமைச்சு நோக்கி ஆரம்பமானது. மிகக் கட்டுப்பாட்டுடன் வீதி ஒழுங்கு முறை கள் மீறாமல் அமைதியாக ஊர்வலம் சென்றது.

வெளிவிவகார அமைச்சில் மகஜரைக் கையளித்து விட்டு மீண்டும் பாராளுமன்றம் நோக்கி ஊர்வலம் ஆரம்பமாகி பாராளுமன்றத்தை அடைந்தது.

ஊர்வலத்தின் இறுதியில் தமிழீ ழச் சங்கத் தலைவர் திரு. துரைச்சாமி அவர்கள் தலைமையில் கூட்டமென்று இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பல பிரமுகர் கள் உரை நிகழ்த்தினார்கள்.இறுதி யில் திரு. துரைச்சாமி அவர்கள் எல்லோருக் கும் நன்றி தெரிவித்தார்.

~ S. பாலச்சந்திரன்.

ஒட்டாவா ஊர்வலத்தில் எடுக்கப்பட்ட சில படங்களை மறுபக்கத்தில் காணலாம்.

படம்: ரஞ்சன்

**விரைவில்...**


**இளையநிலா-10**

*கனடாவில் வெளியாகும் வீடியோ சஞ்சிகை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் உள்ளங்களை கவரும் புடவை மாளிகை


6 Kumars
SILK HOUSE

1394 Gerrard Str. E.
Toronto, ON.
(416) 476-7131



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை அன்பு இல்லம் நிதிக்காக
கனடா தமிழர் மத்தியில்
நடத்தப்பெறும்



# அன்பரங்கம்

தமிழ்க் கலைஞர் விழா

152 அநாதைச் சிறாரின் தொடர்வாழ்வுக்கு
உங்கள் இதயக் கதவுகளைத் திறவுங்கள்!

**1995 ஜூலை 15 சனிக்கிழமை**
**பிற்பகல் 6.30 மணி முதல்**
**வின்சன்ட் சேர்ச்கில் கல்லூரி அரங்கில்.**

**தொடர்பாளர்கள்:**

'ரோஜா' (416) 425-2884
'இளையநிலா' (905) 472-6976
'கரன் கிறாப்' (905) 277-8613

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடியோ மாருதி
# VIDEO MARUTY INC

* Professional Video Productions
* International Video Transfer

தொடர்புகளுக்கு:~

ரொறன்ரோ
கிருபா (416) 751-8143

மொன்றியல்
(514) 989-5021 இன்பன்



# தமிழன் வழிகாட்டி

உங்களுக்குத் தேவையான தகவல்களை (416) 289-8900 என்ற ஒரே இலக்கத்தினைத்
தொடர்பு கொள்வதன் மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்.




விளம்பர அகராதி 1111
ஆலயம் 2222
நகர் வலம் 3333
சினிமா 4444
மீடியா 5555
மலிவு விற்பனை 6666
நியூ இமிகிரன்ஸ் 7777
உலக வலம் 8888
ஆதவன் பப்ளிக்கேசன்ஸ் 9999

வருடத்தின் 365 நாட்களிலும், 24 மணிநேரமும்
உங்கள் விளம்பரங்கள் மக்களிற்கு இலவசமாக சென்றடைய
தொடர்பு கொள்ளுங்கள்

ஆதவன் பப்ளிகேசன்ஸ்: TEL:(416) 724-6402
FAX:(416) 724-2023

தமிழன் வழிகாட்டியில் ரோஜா இதழ் பற்றிய தகவல்களை அறியுங்கள்
தொடர்புகளுக்கு (416) 289-8900 Ext: 5569




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான சோதிடத்தின் வெளிச்சத்தில் ஈழத்துப் போர் பற்றிய ஒரு கண்ணோட்டம்

அஸ்ரோ சென்ரர் வெளியீடான அதிமுக்கிய கிரகங்களின் மாற்றம் எனும் நூலில் விடு தலைப் போராளிகள் பெரும் வெற்றிகளைக் குவிப்பர் என்றும் எதிரிகளுக்கு பலத்த பின்னடைவும், பிரளயம் போன்ற புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி எதிரிகளின் படை சிதறி ஓடுகின்ற காட்சிகளைக் காண்பீர்கள் என்றும்-ஒப்பிரேசன் யாழ்தேவி, பூநகரியின் தவளைப் பாய்ச்சல், பருத்தித்துறை கடற்புலிகளின் தாக்குதல் போன்றவை நிகழ்வதற்கு பல மாதங்களுக்கு முன்னரையே நாம் கூறியிருந் தோம் அதன் பின் வெளிவந்த சோதிட மலரில் 1994ம் ஆண்டு இலங்கை அரசியல் மாற்றங்களைப் பற்றியும், அரசியல் தலைவர் களின் கொலைகள் பற்றியும் எழுதியிருந் தோம். அது போன்ற ஒரு விஞ்ஞானக் கணிப்பினையே இப்போதும் கைக்கொண்டு மேலும் நிகழப் போகின்ற சில உற்பாதங் களை வெளிக் கொணர விரும்புகின்றோம்.

இலங்கையின் தேசிய குறிப்பையும் தமிழினத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் ஜாதகக் குறிப்பையும் ஒப்பிட்டு ஆராய்ந்த பொழுது 1996ம் ஆண்டு முடியும் வரை தொடர்ச்சியாகவோ அல்லது இடை விட்டோ போருக்கு முகம் கொடுக்க வேண் டிய நிலையிலேயே உள்ளனர்.

வானொலியில் கிரகங்கள், நட்சத்திரங்கள், மற்றும் மண்டலப் பிரிவுகள் அமைந்துள்ளன. இவைகளின் குணாதிசயங்கள், இயங்கும் தன்மை, வலிமை போன்ற கருத்துக்கள் பல வழிகளில் அடிப்படை ஆதாரங்களாக சாஸ்திர வல்லுனர்களால் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. அதன் அடிப்படையில் பூமியில் குறிப்பாக மானிட வாழ்வில் நிகழும் சம்ப வங்களை எடுத்துக் கூறுவதற்குப் பயன்படுத் தப்படுகின்றன. இதன் வழிமுறைகள் ஒரு விஞ்ஞான சாஸ்திரமாக அமைந்துள்ளன.

வெளிக் கிரகங்களான யுறேனஸ், நெப்ரியூன், புளுட்டோ, மேறாக் போன்றவையும் மெது வாக நகரும் கிரகங்களான வியாழன், சனி, ராகு, கேது போன்ற கிரகங்களின் இடமாற் றங்களினால் ஏற்படும் விளைவுகளைக் கொண்டு தான் ஒரு நாட்டின் அரசியல்

| | | | |
|---|---|---|---|
| | லக் | | கே |
| செ | 26.11.1954 | | குரு |
| | | | |
| ராகு | சந் சூரி | புத, சனி சுக்(வ) | |

தமிழினத்தின் தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| புது(வ) சுக் | 04.02.1948 | | சனி (வ) |
| சூரி | | | செ (வ) |
| | குரு சந் | கேது | |

இலங்கையின் தேசிய ஜாதகம்




நிலையை உய்த்து உணர முடியும். இதைத் தான் ஆங்கிலத்தில் Mundane Astrology என்று சொல்லுவார்கள்.

தேசிய ஜாதகக் குறிப்பின் அதி உணர்வுப் புள்ளியிலிருந்து 5 பாகைக்குள் யுறேனஸ் என்னும் கிரகத்தின் இடமாற்றம் ஏப்பிரல் 16, 1995 இல் வந்துள்ளது. யுறேனஸ் கிரகம் நாட்டில் ஏற்படும் புரட்சிகளுக்கும், எதிர் பாராத அரசியல் பூகம்பங்களுக்கும், இரத்த வேட்கைகளுக்கும், அரசியல் கொலைகளுக் கும் மூல காரணமாக இருக்கும் கிரகமாகும். யுறேனஸ் முன்னெடுத்த குறிக்கோளை அடைவதற்கு வன்முறை வழி நடத்துவதை ஆதரிக்கும் கிரகமாகும். இம் மாற்றத்தின் போது யுறேனஸ் மேறாக் கிரகத்தோடும் செவ்வாய் கிரகத்தோடும் ஒரு தீய செயற் கையை ஏற்படுத்திக் கொள்வதால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் ஆபத்தானதும் பலாத்கார வழி முறைகளை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இதனால் விடுதலைப் போராளிகளின் திடீர் நகர்வுகளும் அதன் விளைவாக திடீர் தாக்குதல்களும் ஏற்படும். இந்தப் பிணைப்பின் தொழிற்பாடு 16.04.95 க்கு முன்பே தொடங்கி விடுவதால் யுறேனஸ் மாற்றங்களை வேண்டி நிற்க, மேறாக் கரகமும் சனக்கிரகமும் அவ்வகை மாற்றத்தை எதிர்த்து நிற்க முரண்பாடு எழுகின்றது. இம் முரண்பாட்டின் விளைவாக போர்கள், எல்லைப் போராட்டங்கள், சில அரசுகளின் வீழ்ச்சிகள் போன்ற அழிவுகள் தோன்றும்.

இக் கிரக மாற்றங்கள் ஜனவரி 31, 1995 தொடங்கி டிசம்பர் 1996 வரை தமிழ் தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் மீது தமது ஆளுமையை ஏற்படுத்தும். ஜேர்மனி போலந்தைத் தாக்கிய காலத்தில் வெற்றிமீது வெற்றியை கிற்லர் வென்று குவிப்பதற்கு இம் மாதிரியான கிரகச் சேர்க்கை தான் காரணமாக இருந்தது. போர்க்கிரகமான செவ்வாய், புரட்சிக் கிரகமான யுறேனஸ் மற்றும் நெப்டியூன், வியாழன், சனி போன்ற முக்கிய கிரகங்களின் பின்நோக்கிச் செல்வதான வக்கிர நிலைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதால், அண் மைக் காலத்தில் இடம் பெற்ற போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் சமாதான முயற்சிகளும் முன்னோக்கிச் செல்லாமல் பின்னோக்கி முந்தைய போர் நிலைக்கே இட்டுச் செல்வது தவிர்க்க முடியாததாகின்றது.

இலங்கையின் தேசிய ஜாதகத்தில் ஏற்படுத்தப் போகும் விளைவுகள் மிகப் பரிதாபகரமானவை. டிசம்பர் 1995க்கு முன்னர் தமிழீழத்தில் அமைந்துள்ள அனைத்து இராணுவ முகாம்களும் தாக்கப்பட்டு கூடுதலான இராணுவ வீரர்களும், உயர் அதிகாரிகளும் கொல்லப்படுவார்கள். குறிப்பாக பூநகர், ஆனையிறவு, பலாலி போன்ற முகாம்கள் தாக்கப்படும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. கொழும்பு, கொழும்பு நகர் பகுதிகளும், கொழும்பிலிருந்து வடக்கேயுள்ள சுதந்திர வலயம் போன்ற இடங்கள் தாக்கி அழிக்கப்படலாம். இச் சந்தர்ப்பத்தின் பயனால் தென்னிலங்கையில் கிளர்ச்சிகள் தோன்றுவதற்கான அறிகுறிகள் நிறையக் காணப்படுகின்றன.

ஆளும் கட்சியின் அத்திவாரமே அசைக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. உயர் மட்டத் தலைவர்கள் கொலை செய்யப்படலாம். இராணுவ உயர்மட்டத் தலைவர்கள், மதத் தலைவர்கள் போன்றோரின் உயிர்கள் கண்ணி வெடிகள் கருணை காட்டினால் மட்டுமே காப்பாற்றப்பட வாய்ப்புகள் உண்டு. இவ் விளைவுகள் அதிமுக்கியமாக யுறேனஸ் சூரியனோடு சேரும் கால கட்டங்களில் நிகழும். இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அந்நிய சக்திகள் சில நாட்டை மேலும் குழப்பத்திற்குள்ளாக்க முயலும்.

இவ்வாறான யுறேனஸ், சூரியன் சேர்க்கையின் போது தான் இந்திராகாந்தி அவர்கள் பஞ்சாப் தீவிர வாதிகளுடன் கூடுதலான மோதல்களை முன்னெடுத்து இறுதியில் அதற்கே பலியாக வேண்டி வந்தது. இது போன்ற ஒரு நிலையினையே இலங்கையின் ஆட்சி பீடம் இன்று எதிர்நோக்குகின்றது.
ராகுவின் நிலை விருச்சிக ராசியிலிருந்து 22.05.94இல் துலா ராசிக்கு சென்றுள்ளது. இதனால் ஈழத் தமிழருக்கு சிறப்பான காலமாகும். போராட்டத்தில் வெற்றிகள் தொடர்ந்தும் வரும். ஆனால் 28.04.1995க்குப் பின்னர் தமிழர்களும் சம இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும். பெரும் சமூகத்தை சேர்ந்தவர்கள் காடைத்தனம், கொள்ளை, கொடூரச் செயல்கள் என்பனவற்றை கட்ட விழ்த்து விடுவர். இரு பக்கங்களிலும் மனித இழப்புக்கள் தவிர்க்க முடியாததாக அமையும். அடுத்த வருட முடிவுவரை இது தொடரும்.

1983 யூலை மாதம் சூரிய கிரகணம் இடப ராசியில் ஐந்து (5) மணித்தியாலங்களுக்கு நிகழ்ந்த படியால் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு மேல் உயிர் அழிவுகளையும், ஊர் அழிவுகளையும் இலங்கையில் ஏற்படுத்தியது. ஆவணி 20, ஐப்பசி 15ம் திகதி 1993 இல் சூரியனில் பாரிய கிரகணங்கள் ஏற்பட்டதால் தான் ஈழ விடுதலையாளர்களின் வெற்றிகள் அக்காலகட்டத்தில் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள். இதே போன்ற அமைப்பு சூரிய சந்திர கிரகணங்களில் நிகழப் போவதால் விடுதலைப் போராளிகளுக்கு மெச்சத்தக்க வெற்றிகளும் அதே சமயம் உயிர் அழிவுகளும் ஏற்படும். அதுவரை பல துன்பங்கள், உயிர் இழப்புக்கள் தவிர்க்க முடியாதன.

**1997ம் ஆண்டளவில் ஓர் அமைதியான நிலை உருவாக பல தியாகங்களின் பின் 26.06.1998ல் தமிழீழம் அமையப் போவது ஒரு வரலாற்றின் கட்டாயம்.**

*இக்கட்டுரை மே 16, 1995 எழுதப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை நற்சித்திரம் — சிறுவர் பூங்கா

எனது பெயர் அனாரூபி அருள்ராஜா. நான் கனடாவில் விக்ரோறியா என்னும் இடத்தில் ஐப்பசி மாதம் 29ம் திகதி 1984ம் ஆண்டு பிறந்தேன். எனது அப்பாவின் பெயர் அருள்ராஜா. அம்மாவின் பெயர் ஜெயரஞ்ஜனி. நான் கனடாவில் வசிக்கிறேன். நான் ஒக்கோணர் பப்ளிக் பாடசாலையில் 5ம் வகுப்பில் படிக்கிறேன். எனது ஆசிரியர்கள் பெயர் இரசினி செல்வியன், செல்வி எசிறி, எனது தமிழ் ஆசிரியையின் பெயர் திருமதி. சரஸ்வதி. எனது நண்பர்களின் பெயர் அமுதா, தயா, உமா. எனது பொழுது போக்கு முத்திரை சேகரித்தல், தொலைக்காட்சி பார்த்தல். எனது விருப்பமான பாடங்கள் கணிதம், படம் வரைதல், விஞ்ஞானம், பியானோ வாசித்தல். இப்பொழுது தமிழையும் விரும்பி கற்கிறேன்.



**சிறுவர் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

## கடற்கரைகளில் மணற்பரப்பு மிகுதியாக இருப்பது ஏன்?

பூமியில், கடல்கள் தோன்றிய காலம் தொடங்கி இன்றுவரை கடல் அலைகள், மணல் துகள்களைக் கொண்டுவந்து தள்ளுமிடம் கடற்கரையேயாகும். கடலோரங்களிலுள்ள மலைகள், பாறைகள் ஆகியவற்றைப் பல இலட்சக் கணக்கான ஆண்டுகளாகக் கடற்காற்றும் அலைகளும் சிறிது சிறிதாக அரித்துச் சிறு மணல்துகள்களாக மாற்றியுள்ளன. இவ்வாறு உருவாகிய மணல் துகள்கள் கடலலைகளால் அடித்துச் செல்லப்பட்டு, கடல் நீரோட்டங்களால் கடலினுள்ளே இழுத்துச் செல்லப்படுகின்றன. இம் மணல் துகள்கள் கழிமுகப் பகுதிகளில் படிந்து, பின்னர் அவை சமமாகப் பரப்பப்படுகின்றன. மேலும் ஆறுகள் கலலோடு கலக்கும்போது ஏராளமான மணல் துகள்களும் கடலில் சேர்க்கப்படுகின்றன. இவை அலைகளாலும், காற்றினாலும் கரையோரம் தள்ளப்பட்டு, மணற்பரப்புக் கடற்கரையாக உருவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரொறன்ரோ" மாநகரத்தில் தமி
# 20,000 மக்கள் ம

ரொறன்ரோவில் கடந்த சனிக்கிழமை (17.06.95) காலை 10.00 மணியளவில் மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது. சுமார் 20,000 க்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர். தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரி இப்போது நடைபெற்ற பேரணிகளிலேயே ஆகக் கூடுதலான மக்கள் கலந்து கொண்ட பேரணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

**"எங்கள் தலைவர் பிரபாகரன்"**
**"கனடிய அரசே தமிழீழத்தை அங்கீகரி"**
**"சந்திரிகா தமிழரைக் கொல்லாதே"**
**"வெளிநாட்டுப் பணம் தமிழரைக் கொல்வதற்கே"**

போன்ற கோஷங்களை கோஷித்துக் கொண்டு 2000 க்கும் மேற்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஊர்வலம் நகர்ந்தது. ஊர்வலம் ஆரம்பமாகி சுமார் மூன்று மணித்தியாலங்களால் ஒன்ராறியோ பாராளுமன்றம் அமைந்துள்ள குயின்ஸ் பார்க்கை வந்தடைந்த போது ஊர்வலத்தின் இறுதிப் பகுதி ஊர்வலம் ஆரம்பித்த இடத்திலேயே காணப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. கனடா தேசியக்கொடியை முன்னாள் தமிழீழச்சங்கத் தலைவர் திரு.நா. சிவலிங்கமும், தமிழீழத் தேசியக்கொடியை மாவீரன் பிரதீபனின் தாயாரும் ஏற்றிவைத்தனர்.

பாக்டேல் தொகுதி ஒன்ராறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் ரொனி றூப்பிளேற் அவர்கள் உரையாற்றுகையில் ஈழத்தமிழ் மக்களது போராட்டம் நியாயமானது என்றும் இன்று கனடா தேசியக்கொடிக்கருகே தமிழீழத் தேசிக்கொடி பறக்கிறது; கனடாவுக்கும் தமிழீழத்திற்கும் நீங்கள் என்றும் விசுவாசமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டதும் 20,000 மக்களின் கூச்சலும், கைதட்டல்களும் ஓய்வதற்கு சில நிமிடங்கள் எடுத்தன.

அவரைத் தொடர்ந்து ஸ்காபுரோ நாடாளுமன்ற உறுப்பினரும், கனேடிய சட்டத்தரணிகளும், தமிழ் பிரமுகர் பலரும் பேசினார்கள்.

(24ம் பக்கம் பார்க்க)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிழீழத்தை அங்கீகரிக்கக் கோரி மாபெரும் பேரணி











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20,000 மக்கள்....**


(முன்பக்கத் தொடர்ச்சி)


இப்பேரணியை ஒட்டி ரொறன்ரோ, ஸ்காபுரோ, மிசிசாகா பகுதிகளிலுள்ள இன உணர்வு படைத்த தமிழர் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

அன்று சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில் தனது சேவையில் இப்படியோர் ஊர்வலத்தை தான் கண்டதில்லை என்று கூறினார். கனடாவில் நடந்த பேரணிகளில் மிகப் பெரிய பேரணியாக இந்த பேரணி அமைந்துள்ளதாக கனடாச்செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஊர்வலத்தில் எடுக்கப்பட்ட சில படங்களை இப்பக்கத்திலும் மறுபக்கத்திலும் காணலாம்.


படம்: திருமலை செல்வன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கட் வீரர் கூச்




முன்னாள் இங்கிலாந்து கிரிக்கட் அணித் தலைவர் கிரஹாம் கூச் (GRAHAM GOOCH) இரண்டு தசாப்தங்களின் பின், டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார். வேகப்பந்து வீச்சாளர்களை திணரடிக்கும் வல்லமை பெற்ற இவர் ஓர் அமைதியான சுபாவமுடையவர். 1953ம் ஆண்டு பிறந்த GOOCH 1973ம் ஆண்டு முதல் இங்கிலாந்திலுள்ள ESSEX அணிக்காக இன்னும் ஆடி வருகின்றார். 1975ம் ஆண்டு அவுஸ்திரேலியா அணிக்கெதிரான போட்டியில் தனது டெஸ்ட் வாழ்வை ஆரம்பித்தார். அப் போட்டியில் இரு இனிங்சிலும் எந்தவிதமான ஓட்டத்தையும் அவரால் பெறமுடியாது போனது துரதிஷ்டமே. தனது 22 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் கிரிக்கட் தலைமையகம் எனக் கருதப்படும். லோட்ஸ் (LORDS) மைதானத்தில் தனது முதலாவது சதத்தைப் பெற்றார். அதுவும் உலகில் 'பயங்கர நால்வர்' என்று கருதப்பட்ட மேற்கிந்திய பந்துவீச்சாளர்களாகிய Roberts, Holding, Garner, Croft என்பவர்களுக்கெதிராகப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் ஒருவரின் வெற்றிக்குக் காரணம் என்பதைத் தனது துடுப்பாட்டத்தின் மூலம் உலகுக்கு நிரூபித்துள்ளார் இந்த கூச். வயது ஏற ஏற அவரது துடுப்பாட்டத்தில் இளமைத் துடிப்புத் தெரிந்தது. தனது 37 ஆவது வயதில் இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் போட்டியில் 333 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே இவர் பெற்ற அதி கூடிய ஓட்டங்களாகும். 118 டெஸ்ட் பந்தயங்களில் ஆடிய இவர், 20 சதங்களின் துணையுடன் 8900 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகூடிய மொத்த ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் அலன்போடர், சுனில்கவாஸ்கர் என்போருக்கு அடுத்ததாக இருப்பவர் இவரேயாவார். 34 பந்தயங்களில் இவர் இங்கிலாந்து அணிக்குத் தலைவராகவும் பணியாற்றியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர 125 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு 8 சதங்களின் துணையுடன் 4290 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். முதல்தர ஆட்டங்களில் நூற்றுக்கு மேற்பட்ட சதங்களைப் பெற்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரில் 'கூச்' உம் ஒருவராவார். தொடக்க ஆட்டக்காரரான கிரஹாம் கூச் தேவை ஏற்படின் இடைவரிசை ஆட்டக்காரராகவும் ஆடும் வல்லமை படைத்தவர். 42 வயதிலும் ஓட்டங்களைக் குவிக்க வல்ல இவர், இளம் ஆட்டக்காரர்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காகவே ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவரால் ஏற்பட்ட இடைவெளி நிரப்ப முடியாத வெற்றிடத்தை இங்கிலாந்து அணியில் ஏற்படுத்தியுள்ளது.

## ~ வாசு ~

⊃ பாரீஸ் மாநகரில் நடைபெற்ற டெனிஸ் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த தோமஸ் முஸ்ரர் (MUSTER), அமெரிக்க வீரரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கல் சாங் (CHANG) என்பவரை 7-5, 6-2, 6-4 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்ததன் மூலம் சாம்பியன் பட்டத்தைப் பெற்றார்.

★★★

➲ பெண்கள் பிரிவில் ஸ்ரெபி கிராவ் (GRAF), சான்செஸ் விக்காரியோவை (VACARIO) 7-5, 4-6, 6-0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார். இதன் மூலம் நான்காவது தடவையாக FRENCH OPEN வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

★★★

➲ கென்யா நாட்டைச் சேர்ந்த மோசஸ் கிப்ரான்யூ (KIPTANUI) ரோம் நகரில் நடைபெற்ற 5000 மீட்டர் தூரத்தை 12 நிமிடம் 55.3 செக்கனில் ஓடி முடித்து புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

➲ மேற்கிந்திய தீவுகள் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்குமிடையே லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் மே. இந்திய தீவுகள் கோஷ்டி 9 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

★★★

➲ இந்தியாவில் நடைபெற்ற இந்தோ-அமெரிக்க தங்கக் கோப்பைக்கான ஹாக்கி சுற்றுப் போட்டியில் (FIELD HOCKEY) இந்தியா வெற்றி பெற்றது. கனடா இரண்டாம் இடத்தையும், ஆர்ஜன்டீனா மூன்றாம் இடத்தையும், அமெரிக்கா நான்காம் இடத்தையும் பெற்றது.

★★★

➲ 100 மீட்டர் ஒலிம்பிக் சம்பியனான லின்போட் கிறிஸ்ரி (CHRISTIE), அடுத்த வருடம் அட்லாண்டாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள மாட்டார் என அறிவித்துள்ளார்.

★★★




அட்டைப் படம்: கருணா (கிறியேட்டிவ் போட்டோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

பிள்ளையார் ரேடர்ஸ்

3060 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)

Tel: (416) 438-7746



தமிழ்
Since 1991

பரடைஸ்
அச்சகம்

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய
வண்ணத்தில் தரமாகவும் விரைவாகவும்
பெற்றிட நாடுங்கள்

Paradise Print Plus
COMPLETE PRINTING & GRAPHIC DESIGNS

1231 Ellesmere Rd, # 204, Scarborough, Ont.
S.T
Tel:(416) 288-6449 Fax:(416) 288-0595




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் மைக் ஹரிஸ் வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரா?



ஒன்ராறியோவின் ஆட்சிபீடத்தினை ஒன்பது ஆண்டுகால இடைவெளியின் பின்னர் 'புதுமை விரும்பும் பழமை பேண்' எனப்படும் Progressive Conservative கட்சி கைப்பற்றியுள்ளது.

1993ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற கனடிய நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் அடியோடு சரிக்கப்பட்டு, இரண்டு உறுப்பினர்களுடன் மட்டும் திரும்பிய அப்போதைய ஆட்சியாளர்களான மல்றோனி, கிம்காம்பல் ஆகியோரை வாக்காளப் பெருமக்கள் இலகுவாக மறந்திருக்க மாட்டார்கள். அவர்களது கன்ஷர்வேடிவ் கட்சிகளின் மாகாணப் பிரதிநிதிகளே ஒன்ராறியோவின் ஆட்சி பீடத்திற்கு ஏறியுள்ளனர்.

~ உதாசனன் ~

நான்கு மாதங்களுக்கு முன்னர் மைக் ஹரிஸ் என்றால் யார்? அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று ரொறன்ரோவில் வாழும் அநேகரும் தெரியாதிருந்தனர். அந்த மைக் ஹரிஸ் தான் தற்போது ஒன்ராறியோவின் முதலமைச்சர் ஆகியுள்ளார்.

1987ம் ஆண்டு நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் லிபரல் கட்சி 95 ஆசனங்களைப் பெற்றதால் அதன் தலை வர் டேவிட் பீட்டர்சன் முதலமைச்சரானார். அப்போது என்.டி.பி எனப்படும் புதிய ஜனநாயகக் கட்சி 19 ஆசனங்களையும், கன்ஷர்வேடிவ் கட்சி 16 ஆசனங்களையும் பெற்றன. இதனால், ஆளுங்கட்சியாகவிருந்த கன்ஷர்வேடிவ் மூன்றாம் இடத்துக்குச் சென்றது.

1990ல் நடைபெற்ற தேர்தலில் என்.டி.பி 74 ஆசனங்களைப் பெற்றது. அதன் தலைவர் பொப் ரேய் முதலமைச்சரானார். அச்சமயம் ஆளுங்கட்சியாகவிருந்த லிபரல் 36 ஆசனங்களை மட்டும் பெற்று எதிர்க்கட்சியானது. மூன்றாம் இடத்திலிருந்த (16 பேருடன்) கன்ஷர்வேடிவ் 20 இடங்களைப் பெற்றது. இருப்பினும் எதிர்க்கட்சி வரிசையில் இரண்டாம் இடம்தான்!

1990ம் ஆண்டின் ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலையடுத்து எதிர்க் கட்சிகளான லிபரல், கன்ஷர்வேடிவ் கட்சிகளின் தலைவர்கள் பதவிகளைத் துறக்க நேர்ந்தது. இந்த இடைவெளிகளை நிரப்ப வேண்டி எழுந்த சூழ்நிலையில் தலைமைத்துவத்தைக் கைப்பற்றியவர்களே லின் மக்லெளட், மைக் ஹரிஸ் ஆகியோர். இவர்கள் இருவரும் முறையே தங்களது கட்சிகளின் தலைவர்களானார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும், ஒன்ராறியோவில் அரசியல் கட்சியொன்றின் தலைவரான முதலாவது பெண்மணி என்ற வகையிலும் லின் மக்லெளட் ஓரளவிற்கு முன்னணியில் திகழ்ந்தவராயினும், மைக் ஹரிஸ் பொது மக்கள் மத்தியில் ஓர் பிரபல்யமான அரசியல் வாதியாகக் காட்சி தரவில்லை.

இவர் சார்ந்த கன்ஷர்வேடிவ் கட்சி நாடளாவிய ரீதியில் செல்வாக்குற்றிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமை, இவரது கட்சித் தலைவரான பிரான் மல்றோனி கட்சியை பாதாளத்திற்குள் தள்ளிவிட்டு கப்பல் சரியும் போது மாலுமி பாய்ந்தது போல அரசியலிலிருந்து ஓய்வு பெற்றமை, கட்சியினால் நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவு, கடைசிப் பொதுத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பெருந்தோல்வி, ஒன்ராறியோ மாகாணத்திலிருந்து ஒரு எம். பி கூட இக்கட்சிக்குள் தெரிவு செய்யப்படாமை போன்றவைகளால் மைக் ஹரிஸ் பிரபல்யமடையாதிருக்கக் கூடும். ஆனால், ஜுன் 8ம் திகதி நடைபெற்ற மாகாணத் தேர்தல் "அரசியல் சூறாவளி" ஒன்றினை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளது.

130 உறுப்பினர்களைக் கொண்ட குயின் பார்க் மாகாண சபைக்கு 82 உறுப்பினர்களோடு கன்ஷர்வேடிவ் உட்பிரவேசம் செய்துள்ளது. கடந்த நான்காண்டுகளாக 36 உறுப்பினர்களோடு எதிர்க்கட்சியிலிருந்த லிபரல் கட்சி ஆறு பேரை இழந்து 30 பேருடன் திரும்பியுள்ளது. ஆட்சி புரிந்த என்.டி.பி 17 ஆசனங்களுடன் மட்டும் எதிர்க்கட்சி வரிசையில் இரண்டாம் அணியாக வந்துள்ளது.

ஒன்ராறியோவின் 22வது முதல்வரான மைக்கல் ஹரிஸ் (இதுவே அவரது முழுப் பெயர்) 1945ம் ஆண்டு ரொறன்ரோவில் பிறந்தவர். இவருக்கு ஒரு வயதாக இருக்கையில் - 1946ல் இவரது பெற்றோர் North Bayக்கு இடம் மாறினர். சிறுவர்த்தகம் செய்துவந்த பெற்றோரின் கண்காணிப்பில் வளர்ந்து வந்த மைக், படிப்பில் பெரும் திறமையான வராகத் திகழவில்லை. விளையாட்டுக்களில் அதிக கவனம் செலுத்தினார். முதல்வர் மைக் ஹரிஸிக்கு தற்போது 50 வயது. இவரது மனைவியின் பெயர் ஜனற். மைக்கல் ஜீனியர் (10), ஜெப்ரி (3) என்ற இரண்டு ஆண்பிள்ளைகள் இவருக்குண்டு. சில வருடங்கள் இவர் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

1975ம் ஆண்டு North Bayன் நிப்பிஸிங் (NIPPISING) பகுதியில் கல்விச் சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன் இவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பமானது. இரண்டு வருடங்களில் இச் சபையின் தலைவரானார்.

1981ல் இதே தொகுதிக்கு கன்ஷர்வேடிவ் கட்சியினர் ஒரு அபேட்சகரைத் தேடிக் கொண்டிருந்த போது, அப்போது அமைச்சராகவிருந்த அலன் போப் என்பவர் இவரை அணித் தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டார். அந்தச் சமயம் இந்தப் பிரவேசம் லிபரல் கட்சியின் பிரதான தளமாக விளங்கியது. முதலாவது போட்டியிலேயே மைக் ஹரிஸ் 5000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். 1985 இலிருந்து 1987 வரை ஒன்ராறியோ மாகாணத்தில் மூலவள எரிபொருள் அமைச்சராகவிருந்த மைக் 1990ல் கட்சியின் தலைவரானார். ஐந்தாண்டுகளில் மாகாணத்தின் முதலமைச்சர் ஆகியுள்ளார்.

மைக் ஹரிஸ் நடத்திய தேர்தல் பிரசாரம் 'புயல்' போன்றது. மக்களைக் கவரக் கூடியதாகவிருந்தது. லிபரல், என்.டி.பி ஆகிய கட்சிகளை நேரடியாகச் சாடிக் கொண்டு தேர்தலை முன்னெடுத்துச் சென்றார். வரிக் குறைப்பு, செலவினங்களின் குறைப்பு, பொதுநலப் படியில் இருப்பவர்களுக்கு கட்டாய சேவை (வேலை) என்ற மூன்றுமே இவரது மூல மந்திரங்கள். அதுமட்டுமல்ல, பொப்ரேய் அரசினால் சிறுபான்மை மக்களுக்கு சாதகமாகக் கொண்டு வரப்பட்ட Employment Equity எனப்படும் வேலைச் சமத்துவ சட்டம் உடனடியாக நீக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். லிபரல் கட்சியானது தாமே ஆட்சி உறுதி என்ற நம்பிக்கையில், கார் காப்புறுதிக் குறைப்பு, வேலைவாய்ப்பு ஆகிய வாக்குறுதிகளுடன் மக்கள் வட்டத்தை வலம் வந்து கொண்டிருந்தது.

மாகாணம் நிதி நெருக்கடிக்குள் புதைந்து கொண்டிருந்த வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்கு வந்திருந்த என்.டி.பி கடந்த நாலரை வருடங்களாக ஏமாந்து மோசடி யற்ற, நேர்மையான ஆட்சியைப் புரிந்து, சிறுபான்மையினருக்கும், புதிய குடிவர வாளர்களுக்கும் நன்மைகளைச் செய்து வந்ததாயினும், அரசியல் மோசடிகளால் உருவாகிய பெரும் அலையினுள் அத னால் தாக்குப் பிடிக்க முடியாமல் போய்விட்டது.

மொத்தத்தில் ஒன்பது வருடங்களாக லிபரல், என்.டி.பி கட்சியில் கொஞ்சம் சலித்துப் போயிருந்த மக்கள் ஒரு மாற் றத்தை விரும்பியுள்ளனர். அந்த மாற்ற மானது "புதிய வரிகள் இல்லை; தற்போ தைய வரியினும் 30 வீதம் குறைப்பு" என்றபோது அது அவர்களுக்கு 'சுவீப்' போலவே தென்பட்டது. ஆனால் அது சாத்தியமாகுமா என்பதைப் பலரும் நினைத்துப் பார்க்கவில்லை. 1966-67 நிதியாண்டில் வரியில் 15 வீதம் குறைக் கப்படும் என்றும், அடுத்தாண்டுகளில் அடுத்த 15 வீதமும் குறைக்கப்படும் என்றும் மைக் ஹரிஸ் உறுதியளித் துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலைப் பொறுத்தள வில் பெருந் தோல்வி கண்டது லிபரல் கட்சிதான். பொதுவாக எதிர்க்கட்சியே எப்பொழுதும் ஆளுங்கட்சியாவது வழமை. ஆனால் இங்கு அது நடைபெற வில்லை. மூன்றாம் வரிசையிலிருந்த கன்ஷர்வேடிவ் ஆட்சிபீடமேறியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், பொப் ரேய் தேர்தலுக்கு நாள் குறித்த போது, மக்கள் கருத்துக் கணிப்பீட்டில் 54 வீதம் செல்வாக்குப் பெற்று லிபரல் முன்னின் றது. கன்ஷர்வேடிவ் 30 வீதமளவிலேயே நின்றது. ஆனால் ஆறு வாரங்களுக்குள் எல்லாமே தலைகீழானது. லிபரலின் செல்வாக்குப் படிப்படியாகக் குறைய, கன்ஷர்வேடிவ் மேலோங்கிச் சென்றது. கடைசியாக கடந்த வருடம் தம்மிடமி ருந்த 36 உறுப்பினர்களுள் ஆறு பேரைப் பறிகொடுத்து 30 பேருடன் லிபரல் கட்சி குயின்ஸ்பார்க் திரும்பி யுள்ளது. மத்தியில் ஆட்சிபுரியும் ஜோன்-கிரட்சியானின் லிபரல் அரசின் போக் கினால் மனமுடைந்திருக்கும் மக்கள், மாகாணத்தினுள் அவர்கள் வருவதை விரும்பவில்லையா அல்லது ஒரு பெண் மணி மாகாண முதலமைச்சராவதை இங்குள்ள மக்கள் விரும்பவில்லையா, அல்லது சரியான முறையில் பிரசாரத் தினை லின் மக்லெளட் எடுத்துச் செல்லவில்லையா?

இதுபற்றிய பிரேத பரிசோதனை ஒன்று தற்போது நடைபெற்று வருகின்றது. இதன் முடிவாக, லின் மக்லெளட்டின் தலைமைத்துவம் பறிபோனலும் ஆச்சரி யப்பட இடமில்லை.

நிறைவேற்ற முடியாதவைகள் என்று நம்பப்படும் தேர்தல் வாக்குறுதிகளுடன் 82 உறுப்பினர்களோடு 22வது முதல மைச்சராகியுள்ளார் நடுத்தர வயதின ரும், விளையாட்டுப் பிரியருமான மைக் ஹரிஸ்.

130 ஆசனங்களைக் கொண்ட ஒன்ராறியோ மாகாண சபையை 31 இனால் குறைக் கப் போவதாகவும் அடுத்த மாகாணத் தேர்தலில் 99 ஆசனங்களே இருக்கு மென்றும் அவர் கூறியுள்ளார். இதனை அவரது எம். பி. க்களே ஆதரிப்பார்களா என்பது சந்தேகம். இதற்கிடையில் வரிக் குறைப்பு, செலவினக்குறைப்பு, அரச உதவி பெறும் அனைவருக்கும் கட்டாய சேவை எனப்படும் வாக்குறுதிகள் வேறு!

ஐந்தாண்டுகள் ஆட்சியில் நிலைப்பாரா? அல்லது தமது அரசியல் புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தை எழுதுவாரா? அல்லது மீண்டும் ஆட்சிக்கு வருவாரா? பொறுத்திருக்க வேண்டியதில்லை. சில மாதங்களில் நிலைமை தெரியவரும்.

எல். கிரிஷோத்
ரைப்செட்டிங்
(416) 425-2884



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு

தயாரிப்பு:
~ எஸ். பாலச்சந்திரன் ~

*கடந்த மே மாதம் 20ம், 21ம் திகதிகளில் Music Hallல் 'பொன்மாலைப் பொழுது' கலை நிகழ்ச்சியை நடத்தவந்த பிரபல கலைஞர்களுடனான சந்திப்பு*



ஜோஸ்வராஜன் அவர்களே கடந்த வருடம் கனடாவுக்கு வருகை தந்து ரொறன்டோ, மொன்றியல் ஆகிய நகரங்களில் இசை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியிருந் தீர்கள். இந்த வருடமும் இசை விருந்தளிக் கப் போகிறீர்கள். கடந்த வருடத்தை விட இந்த வருடம் உங்கள் நிகழ்ச்சிகள் எப்படி அமையவிருக்கின்றன?

*மிகச் சிறப்பாக செய்யவிருக்கிறோம். எல்லாருமே பிரபலமான கலைஞர்கள். சுசீலா, மனோ, புவனா, சுந்தரராஜன், விசித்திரா, பலகுரல் மன்னன் தீப அருணாசலம் அவர்களுடன் திறமை மிக்க வாத்திய கலைஞர்களும் வருகை தந்திருக்கிறார்கள். பழைய புதிய திரைப் படப் பாடல்கள், தீப அருணாசலத்தின் மிகிக்ரி, விசித்திரமான விசித்திராவின் திரையிசை நடனம் என்பன ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைத் தருமென்பது என் எண்ணம்.*

ஆயிரத்திற்கு மேற்பட்ட மேடை நிகழ்ச்சி களை நடத்தியிருக்கும் நீங்கள் திரைப் படத்திற்கு இசையமைத்திருக்கிறீர்களா?

*மேடை நிகழ்ச்சிகளை சுறு சுறுப்பாகச் செய்து வந்த காரணத்தால் முன்பு திரைப் படங்களுக்கு இசையமைப்பதைப் பற்றிய கவலையிருக்கவில்லை. என்னுடைய இசையமைப்பில் P. சுசீலா, ஜிக்கி, ஜெயச்சந்திரன், மனோ போன்ற பிரபல பாடகர்கள் பாடியிருக்கிறார்கள். நீங்கள் கேட்டதற்காகச் சொல்கிறேன் அண்மை யில் ஒரு திரைப்படத்திற்கு இசையமைத் திருக்கிறேன்.*

பழைய பாடல்கள் போல் புதிய பாடல்கள் நிலைத்திருக்குமென்று நினைக்கிறீர்களா?

*காலத்துக்குக் காலம் ரசனை மாறுபடும். ஒரே சாப்பாட்டைத் தொடர்ந்து எப்படிச் சாப்பிட முடியாதோ அதுபோல ஒரு மாறுதலுக்காக இளம் இசையமைப் பாளர்கள் "முக்காலா முக்காபுலா", "சிக்குபுக்கு ரயிலே" போன்ற பாடல்களை ரசிகர்களுக்கு வழங்குகிறார்கள். இந்தப் பாடல்கள் ரசிகர்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடிக்குமா? என்ற கேள்விக்கு விடையைக் காலம்தான் கூற வேண்டும்.*

உங்களைக் கவர்ந்த இசையமைப்பாளர் கள் யாரென்று கூறமுடியுமா?

*K.V. மகாதேவன், M.S. விஸ்வநாதன்-ராமமூர்த்தி, இசைஞானி இளையராஜா, V. குமார் ஈறாக A.R. ரகுமான் இவர்கள் எல்லோரையும் எனக்குப் பிடிக்கும்.*

P. சுசீலாவிடம்...

45 வருடங்களாகப் பின்னணி பாடிவருகிறீர் கள். இந்த வெற்றியின் ரகசியம் என்ன?

*ஒரு பாடகியாக நிலைத்து நிற்க முதலில் நல்ல குரல்வளம் வேண்டும். அடுத்த படியாகத் தொழில் மீது பக்தி வேண்டும். இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும், சாப்பாட்டு விடயத்தில் நான் மிகவும் கண்டிப்பு ஐஸ்கிறீம் சாப்பிடுவதில்லை.*

பெற்ற தாய் திரைப்படத்தில் A.M. ராஜா அவர்களுடன் 1952ம் ஆண்டு நீங்கள் முதன் முதலில் பாடி அறிமுகமானீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரணி ஜுவலறி




## Thaarani Jewellery

- *Diamond Cut & Other Bangles*
- *மகரப் பதக்கம்*
- *சிங்கப்பூர் நகைகள்*

*அனைத்து நகைத் தேவைகளுக்கும்... நகரில் சிறந்த கைவேலைப்பாட்டுடன் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.*

(416) 289 6556

3630 Lawrence Ave. E., Unit 03, Scarborough (Markham & Lawrence) ON.

ரோஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GASA Restaurant





இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

## Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும் நீங்கள்
விரும்பிய உணவுகளையும் சிற்றுண்டி
வகைகளையும் சுவையுடன் செய்து தருகிறோம்.

## சுவை, அது *GASA!!!*

மலிவு விலையில்....

| | |
|---|---|
| * Rice with 4 Veg. + 1 Meat Curry | **$4.75** |
| * 10 Chicken Wings with Fries | **$3.99** |
| * 5 Chicken Wings with Fries | **$1.99** |
| * கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | **$3.99** |
| * 2 ரொட்டி + கறி | **$2.99** |

## Tel: (416) 321-1219

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON

ராஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் A.M. ராஜா இசையமைப்பாளராக மாறி திரைப்படங்களுக்கு இசையமைத்த போது அவருடைய இசையமைப்பின் கீழ் பல இனிய பாடல்களைப் பாடியிருக்கிறீர்கள். அது பற்றி........



*A.M. ராஜா ஒரு சிறந்த பாடகர். அவருடைய இசையமைப்பில் நிறைய பாடல்களைப் பாடியிருக்கிறேன். அந்த வேளைகளில் அவரை நான் ஒரு இசையமைப்பாளராகத்தான் பார்த்தேன். முன்பு இவர் என்னுடன் பின்னணி பாடியவர் என்ற எண்ணம் எனக்கிருக்கவில்லை. ஏனெனில் கண்டசாலா அவர்களுடன் இணைந்து பாடியிருக்கிறேன். அவருடைய இசையமைப்பில் பாடியுமுள்ளேன். இவ்வளவு ஏன் மனோ இசையமைப்பாளராக மாறினால் அவருடைய இசையமைப்பிலும் பாட நான் ரெடி (என்று கூறிவிட்டுச் சிரிக்கிறார். அருகிலிருந்த பாடகர் மனோவும் வாய்விட்டுச் சிரிக்கிறார்)*

இசைஞானி இளையராஜா பற்றி கூறமுடியுமா?

*அவர் ஒரு மேதை. முதன் முதலில் அன்னக்கிளி திரைப்படத்திற்கு இசையமைத்திருந்தார். அந்தப் படத்தில் நானும் பாடியிருக்கிறேன் என்று சொல்வதில் பெருமையடைகிறேன். இளையராஜா குறுகிய காலத்தில் நிறைய படங்களுக்கு இசையமைத்தவர்.*

இசையமைப்பாளர் A.R. ரகுமான் பற்றி..?

*இப்பொழுது பரபரப்பாகப் பேசப்படும் பிசியான இளைஞர் அவர். 'புதிய முகம்' திரைப்படத்தில் அவருடைய இசையமைப்பில் "கண்ணுக்கு மையழகு" என்ற பாடலைப் பாடினேன். பாடலும் அழகு.*



மெல்லிசை மன்னர் M.S. விஸ்வநாதனின் உதவியாளராக இருந்தீர்கள். ஆனால் உங்களைப் பாடகனாக அறிமுகம் செய்து வைத்தவர் இசைஞானி இளையராஜா. இவ்விருவரில் உங்களைக் கவர்ந்தவர் யார்?

*இருவரும் மிகச் சிறந்த இசையமைப்பாளர்கள் தான். M.S.V அவர்களிடம் நான் கற்றுக் கொண்டவை ஏராளம். குறிப்பாக இசை நுணுக்கம். என்னைப் பாடகனாக அறிமுகம் செய்து வைத்த தோடு 'சிங்கார வேலன்' திரைப்படத்தின் மூலம் நடிகனாகவும் அறிமுகம் செய்து வைத்தவர் என் கண்கண்ட தெய்வம் இசைஞானி இளையராஜா. இருவரும் என் இரு கண்கள் போன்றவர்கள்.*

அறிமுகம் செய்து வைத்த இளையராஜா, உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும் A.R. ரகுமான் இவர்களைப் பற்றி......?

*இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இளையராஜாவுக்கும், ரகுமானுக்குமிடையில் போட்டி இருப்பதாக பலர் நினைக்கிறார்கள். அது தவறு. இருவரும் நல்ல நண்பர்கள். A.R. ரகு-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் முன்பு இளையராஜாவிடம் பணியாற்றியவர். இவர்களுடன் பணியாற்றுவது எனக்கு மிகவும் பிடிக்கும்.

உங்களுக்குப் பிடித்த பாடகர்கள் யார்? பிடித்த பாடல் எது?

S.P. பாலசுப்பிரமணியம், K.J. ஜேசுதாஸ், P. சுசீலா, S. ஜானகி, சித்ரா, ஜிக்கி, சுவர்ணலதா.... இன்னும் பலர் இருக்கிறார்கள். P. சுசீலா அவர்களுடன் என் ராசாவின் மனசிலே என்ற படத்திற்காகப் பாடிய "ராசாத்தி மனசிலே" என்ற பாடல் எனக்கு மிகவும் பிடித்த பாடல்.



புவனா, நீங்கள் எத்தனை வருடங்களாக மேடைகளில் பாடி வருகிறீர்கள்?

சுமார் 5 வருடங்களாக பிரபல இசையமைப்பாளர்களின் இசை நிகழ்ச்சிகளில் பாடி வருகிறேன்.

திரைப்படங்களுக்குப் பின்னணி பாடியிருக்கிறீர்களா?


ஆம். வெளிவரவிருக்கும் 5 படங்களுக்குப் பாடியிருக்கிறேன்.

உங்களை அறிமுகம் செய்து வைத்த இசையமைப்பாளர் யார்?

தேனிசைத் தென்றல் தேவா சார்.

உங்களுக்குப் பிடித்த பாடகிகள் யார்?

S. ஜானகி, P. சுசீலா, ஜிக்கி, ஜமுனாராணி, P. லீலா, மற்றும் சித்ரா, சுவர்ணலதா ஆகியோர்.



தீப அருணாசலம் அவர்களே, பலகுரலில் பேசி நடிக்கும் திறமை உங்களிடம் இருக்கிறதென்று எப்படி அறிந்து கொண்டீர்கள்?

ஒரு இயக்குனராக வரவேண்டுமென்ற ஆசை எனக்கிருந்தது. நடிகர்களுக்கு நடிப்புச் சொல்லிக் கொடுப்பதென்றால் அது சம்பந்தமான விடயங்களில் நிறையத் தேர்ச்சி வேண்டும் என்ற உண்மை உணர்ந்த காரணத்தால் ஒவ்வொரு நடிகருடைய பாணியையும் அவர்கள் பேசுவதையும் உன்னிப்பாக அவதானித்து அவர்களைப் போல நடிக்க முயற்சித்ததன் விளைவாக என்னால் பலகுரலில் பேசி நடிக்க முடிகிறது.

உங்களைக் கவர்ந்த நடிகர்கள் யார்?

பழம்பெரும் நடிகை கண்ணாம்பா, பானுமதி, சாவித்திரி, மனோரமா போன்ற நடிகைகளையும், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், திரையுலக பீஸ்மர் என்று அழைக்கப்படும் V.K. ராமசாமி, M.N. நம்பியார், கமல், ரஜனி ஆகியோரையும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

விசித்திராவிடம்...

முதலில் தலைவாசல் படமூலம் அறிமுகமானீர்கள். இந்த சந்தர்ப்பம் யார் மூலம் உங்களுக்குக் கிடைத்தது அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு உங்களுக்குக் கிடைத்தது என்று கூறுங்களேன்?



தலைவாசல் படம் வந்து......., நான் பிளஸ் டு படித்து முடித்ததன் அப்புறம் என்ன *Professional* செலக்ட் பண்ணலாமென்று இருந்தேன். அப்போ எங்க அப்பா வந்து பிலிம் இன்டஸ்ரியில் இருக்காரு. அப்ப என்ட வீட்ட ரொம்ப பிலிம் *People* எல்லாம் வருவாங்க. அப்படி வரும்போது என்ட *Personalty* எல்லாம் பார்த்து நீங்க பிலிம்மில் நடித்தீங்க என்றால் நல்லாயிருக்கும் என்று சொன்னாங்க. என்னுடைய போட்டோ நிறைய பத்திரிகையில வந்திச்சு. அப்போ ஒரு பத்திரிகையை பார்த்திட்டு தலைவாசல் படத்தின் டைரக்டர் செல்வா சார் தன்னுடைய *Office* க்குக் கூப்பிட்டு செலக்ட் பண்ணினாரு. அப்படித்தான் எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது.


Creative Photo



"Canadian Style Sri Lankan Smile"

வாழ்வில் நடக்கும் முக்கிய வைபவங்களை நவீன முறையில் படம் பிடித்துக்கொள்ள...

கருணா

**(416) 429-8586**


சென்ற இதழுக்கான சினிமா பதில்:

**"லக்கி மேன்"**

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:

**ம. சந்திரன் (மிசுசாகா)**

**$25.00**

இந்த இதழுக்கான சினிமா கேள்வி:

**பாடகர் மனோ பாடிய முதல் பாடல் எது? பாடல் இடம்பெற்ற படம் எது?**


பதில்களை ஜுலை 10, 1995ம் திகதிக்கு முன்னராக 'ரோஜா'வுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனிக்கான தமிழ் அகராதி சுவிஸில் வெளியீடு

தமிழ்- ஜெர்மன் ஆங்கில மொழிகளுக்கான உலகின் முதலாவது கணனிக்கான அகராதி வெளியீடு சுவிஸ் நாட்டின் பேர்ண் நகரத்தில் திரு. வா. சண்முகராஜா தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் திரு. ந. முரளிதரன் அவர்கள் இவ் அகராதியை சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில், கணனியின் பாவனையையும் அதன் அத்தியாவசியத்தையும் பற்றி குறிப்பிட்டதுடன் இவ் அகராதியை வெளியிட்டு வைத்த திரு. உதயசங்கரின் இவ் வெளியீடும் இவ் வெளியீட்டு விழாவும் இதுவரை இடம்பெற்ற விழாக்களிலும் வெளியீடுகளிலிருந்தும் வேறுபட்டது. இது எமது தமிழ் சமூகத்திற்கு முக்கியமானது என்பதனையும் குறிப்பிட்டதுடன் வேற்று மொழியில் வெளிவந்துள்ள கணனிக்கான அகராதியிலுள்ள சொற்கள் மிக அதிகம் என்பதையும் குறிப்பிட்டார்.



இவ்விழாவில் உரையாற்றிய தலைவர் திரு. சண்முகராஜா, திருமதி. சிவரஜனி, செல்வி. அன்டோனட் ஆகியோர் இன்றைய நவீன கணனி யுகத்திற்கு எமது தமிழ் சமுதாயம் மாறவேண்டும் என்பதனையும் வேற்று மொழிகளின் அறிவைப் பெறுவதன் அவசியத்தையும் குறிப்பிட்டதுடன் ஒரு அகராதி எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு இதை உருவாக்கிய ஆசிரியர் திரு. உதயசங்கரைப் பாராட்டினார்கள்.

இவற்றிற்குப் பதிலளித்துப் பேசிய கணனி அகராதியின் ஆசிரியர் தன்னால் உருவாக்கப்பட்ட இந்த சிறிய முயற்சி பலகாலமாக பல கல்வியில் சிறந்தோர்களின் உதவியுடன் செய்யப்பட்டு வெளிவந்துள்ளது. இதன் தொடர் வெளியீடுகளில் முடிவற்ற சொற்களையும் மேலதிக பல விடயங்களையும் சேர்ப்போம் எனவும் கூறினார். அத்துடன் எமது தமிழ் மக்களின் கணனியில் கூடிய அறிவு படைத்தவர்கள் இவ்வாறான பல அகராதிகளையும் அதன் பாவனையையும் பற்றிக் குறிப்பிட்டதுடன் அவற்றை திரையில் காட்டி விளக்கம் அளித்தார்.

நன்றி: ஈழநாடு (பரிஸ்)

**"இளைஞர் அணி"**
**சிறுகதை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களை மதிக்கப் பழகிக்கொள்வோம்!



சென்ற மாதம் வெளிவந்த இளையநிலா - 9ல் ரவி அச்சுதனின் பாடல்காட்சியை பார்த்துவிட்டு அவரை சந்தித்து வாழ்த்தினேன். அவ்வேளை அவர் அந்தப் பாடல் காட்சியை அமைத்த தொழில் நுட்ப முறைகளை கூறியபோது ஆச்சர்யப் பட்டேன். வழமையாக இப்படியான ஒரு பாடல் காட்சியை படமாக்கும் போது ஒவ்வொரு உடைகளிலும் முழுமையான பாடலை படமாக்கிய பின் 'எடிட்டிங்' செய்வார்கள். ஆனால் இவர் உடைகளை மாற்றிவரும் பாடல் துண்டுகளை மட்டுமே படமாக்கி இணைத்துள்ளார். அவர் மேலும் கூறும்போது எம்மவர்கள் சிலர் இப்படியான பாடலுக்கு ஒரு பெண் வாயசைப்பதா என்று கேலி செய்ததாகக் கூறினார். எமது சமுதாயத்தில் பெண்கள் மேடையேறுவதற்கு பின் நிற்பதற்குக் காரணம் எம்வர்களின் கேலிகளே. ஒரு கலையை கலையாக ரசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு ஒரு ஓவியன் ஒரு நிர்வாணமாக பெண்ணின் படத்தை வரைந்திருந்தால் அந்த ஓவியக் கலையை ரசிக்க வேண்டுமே தவிர ஆபாசக் கண்ணுடன் பார்த்து அந்த ஓவியனைக் கேலி செய்வது அழகல்ல.

இப்பாடல் காட்சியை சொற்ப தொழில் நுட்பக் கருவியை வைத்துப் படமாக்கிய ரவி அச்சுதனும், எமது சமுதாயத்தில் புதிய கலைஞர்கள் உருவாக வேண்டுமென்ற ஆர்வத்தில் இந்தப் பாடல் காட்சியில் நடித்த செல்வி. தாரணி ரங்கநாதனும் பாராட்டுக்குரியவர்கள்.

– திருமலை செல்வன் –

---

அமெரிக்க சோதிட சம்மேளனத்தின் ஜோதிட கலாநிதி (டாக்டர்) பட்டம் பெற்ற பிரபல ஜோதிடர் திரு. ஜெயா கந்தையா அவர்களுக்கு "ரோஜா" வின் பாராட்டுக்கள்.

திரு. ஜெயா கந்தையா அவர்களுக்கு அமெரிக்கா சோதிட சம்மேளம் சோதிட கலாநிதி (டாக்டர்) பட்டமளித்து கௌரவித்திருக்கும் செய்தி தமிழீழத்தவர்களுக்கு மகிழ்ச்சி தரும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த சில வருடங்களாக தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் அதன் போக்கு எப்படியமையும் என்பது பற்றியும் பல ஆய்வுகளை சோதிட ரீதியில் கணித்து வெளியிட்டு வருகிறார். அவரது கணிப்புக்களில் பெரும்பாலானவை அப்படியே நடைபெற்று வருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. திரு. ஜெயா கந்தையா அவர்கள் அமெரிக்கா சோதிடர் சம்மேளனத்தின் பரீட்சையில் சித்தியெய்தி பட்டதாரியானார். இன்றுவரை மேற்படி பரீட்சையில் சித்தியெய்தி பட்டம் பெற்ற இலங்கையர் இருவரில் மற்றவரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கலாநிதி நவரத்தினம் என்னும் தமிழரே.

டாக்டர் பட்டமளிப்பு விழா விரைவில் கலிபோர்னியாவில் நிகழவிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகிய படிமங்களும் அநியாய வடிவங்களும்

மௌனத்தின் ஆழம்
புரியப்படாமல்
விட்டுக்கொடுப்பின் விருப்பம்
விளங்கப்படாமல்
போய்விடும் வேளைகளில்
சிறகிழந்த
சிட்டாகிறது மனம்

மென் உணர்வுகள்
மறுதலிக்கப்பட்டு
மனவக்கிரகங்கள்
மாலையிட்டுக் கொள்கின்றன

விகாரமான
சில விருப்புகளால்
வித்திடப்படுகிற சிந்தனை
கோரமான
எண்ணங்களால்
கருக்கட்டப்படுகிற ஆசைகள்

சலனங்களால்
தடம் மாறிப் போய்
சஞ்சலப்பட்டுக் கொள்ளும்
சந்தோஷங்கள்

குற்ற உணர்வுகள்
கூனிக் குறுகி
மனித நேயத்திடம்
மண்டியிட்டு
மன்னிப்புக் கேட்கிறது.

~ சிவதாஸ் ~
யாழ். மருத்துவ பீட
மாணவன் - இறுதி வருடம்)

## தமிழா ஒன்றுபடு

இன்று மறையும்
கதிரவனும் - நாளை
விடியும் காலை வந்துவிடும்
விடியலைத்தேடிப்
புறப்பட்டோம் - நம்
விடுதலை தொடர்கதை யானதடா.....

விடுதலைப் பாதையில்
வேங்கைகளாய் - நம்
அண்ணா, அக்கா, தம்பி,
தங்கைகளாம்!
ஆயுதம் ஏந்திப் போராடி - தினம்
வீரச்சாவை ஏற்கும் தெய்வங்களாம்!......

அரசபடைகள் நாள்தோறும் - எம்மை
கொன்றுகுவித்தன சிலகாலம்
இந்திய இராணுவம் சில காலம் - எம்
மண்ணில் செய்தது அராஜகம்.....

பெற்றோரை இழந்தன
குழந்தைகள் - நம்
மண்ணிலே அநாதைகளாய்
மழலைகள்...
அன்பு, பாசம், நேசம்
இவைகளெல்லாம்
வேஷங்களா? - இல்லை
எம் மழலைகள்வாழ நாம்
உதவிக்கரங்களை நீட்டுவோம்...
எம் தாய்நாடாம் தமிழீழத்தில் - பல
அறிஞர்கள், கல்விமான்களை
உருவாக்குவோம்!
பகைமையைக் களைந்து எமது
ஒற்றுமையால் - நம்
மண்ணின் விடுதலைக்காக
குரல்கொடுப்போம்!!
வாழ்க தமிழ்! மலர்க தமிழீழம்!!!

~ லவன் ~~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பேருக்குமே அதிர்ச்சி கலந்த சந்தோஷம். யார் முதலில் இனி கதைப்பது என்று திணறினார்கள். சூர்யா தான் முதன் முதலில் வாய் திறந்தான். "என்ன ராஜி இதுக்குப் போய்..."

இல்ல சூர்யா அவர்கள் என்னை... என்னை... மேலே வார்த்தை தடுக்க விசும்பத் தொடங்கினாள்.

கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக வழியத் தொடங்கியது. பாலாவிற்கோ இரண்டு பேரையும் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. அவனிற்கு சூர்யா, ராஜியைப் பற்றி ஏற்கனவே கூறியிருக்கிறான்.

இவளா ராஜி இத்தனை அழகானவளா...? அழும் போதுகூட பட்டாம்பூச்சியொன்று மலர்களிடையே இருந்து வெளிவாராது தத்தளிப்பது போலல்லவா இருக்கிறது....

ராஜிக்கு சூர்யாவைக் காணக் காண விசும்பல் அழுகையாக வெடிக்க குனிந்த படி அழத்தொடங்கினாள். மேனி குலுங்கியது. அவளை யாரும் இந்தளவிற்கு இதுவரை சீண்டியதில்லையே....!

சூர்யாவிற்கு அவளை என்ன சொல்லி சமாதானப்படுத்துவதென்று தெரியவில்லை. வாங்க எல்லோரும் நம்மையே பார்த்தபடி போகிறார்கள் முகம் கழுவி விட்டு கிளாசிற்கு போகலாம்.

குழந்தை மாதிரி... என்ன இது ராஜி... இல்லை சூர்யா அவர்கள் சும்மா கலாட்டா பண்ணினால் பரவாயில்லை ஆனால்... அவர்கள் என்ன சைஸ்ல எங்கே வாங்கினது.. இன்னும் அசிங்க அசிங்கமாய்... மேலே கூற முடியாது திக்கினாள். கூடவே அவமானமாகவும் இருந்தது.

சூர்யாவிற்கும், பாலாவிற்கும் என்ன கூறுவதென்றே தெரியவில்லை. "பிளடி சிற்" இப்படியா கேட்டார்கள். இப்படி ஒருசில மாணவர்கள் கேட்டு கலாட்டா பண்ணுவார்கள் தான் ஆனால் ராஜி எந்தளவிற்கு பாதிப்படைந்திருக்கிறாள்.

ராஜி அழாதைங்கோ என்று அவளின் தோளில் மெதுவாக தட்டி அணைத்துக் கூறவேண்டும் போல் இருந்தது சூர்யாவிற்கு.

தன்னாலே அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டு அவர்களுடன் நடந்தாள் ராஜி. மூவரும் ஒன்றுமே பேசாது நடந்தனர்.

சூர்யாவால் இரவு தூங்கவே முடியவில்லை. ராஜியை காலையில் கண்டது தொடக்கம் அவனுக்கு எதுவுமே ஓடவில்லை. பாலாகூட எத்தனை தரம் கூப்பிட்டு ஏசிப் போட்டான்.



அழும்போதுகூட ராஜி அழகாய்த்தான் இருக்கிறாள். மருண்டபடி அவள் திக்கித் திணறியது இளம் மானொன்று காட்டில் சிக்கி வழிதெரியாது தவித்தது போலல்லவா இருந்தது.

# ஸ்நேசங்கள்

~ B.R. ரஞ்சனி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் திணறியபடி அந்த வார்த்தையை கூறும்போது எத்தனை கூனிக் குறுகினாள்.

அப்போ எத்தனை தூரம் பாதிப்படைந் திருப்பாள். 'ராஸ்கல்ஸ்' அப்படியா கேட் டார்கள். எல்லாரையும் கூப்பிட்டு கன்னத் தில் அறையவேண்டும் போலிருந்தது. ஆனால் ராஜி அழுவதை மீண்டும் மீண் டும் பார்க்க வேண்டும் என்று உள்மனம் சொன்னது.

என்னடா தூங்காமல் யோசனை ராஜியின் நினைவா, பாலா கிண்டலடித்தான்.

இங்கேதானே இனி இருக்கப்போறாள் இனி இடையே கண்டு களியண்டா... இப்ப எனக்கு தூக்கம் வருது லைட்டை அணைக்கப் போறன். கூறியபடி நிற்காது லைட்டை அணைத்தான்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தது. பழையவர் புதியவர் என பாடுபாடு இல்லாது அனை வரும் பழகினர். ராஜிக்கும் சூர்யாவிற்கும் ஒருவரையொருவர் பாராது விடில் பைத் தியமே பிடித்து விடும் அளவிற்கு வந்து விட்டது.

இருவர் மனதிலும் ஒருவர் மேல் ஒருவர் தீராத காதல் கொண்டிருந்தனர். ஆனால் வெளியில் அதைக் காட்டத்தான் முடிய வில்லை, தயக்கம்.

ராஜிக்கு இன்று பின்னேர வகுப்பு இல்லா ததால் லைபிறரிக்கு நோட் எடுக்கலாம் என்று வந்திருந்தாள். சூர்யா எங்காவது இருக்கிறானா என கண்கள் நாலா பக்க மும் சுழன்றது. ஆம் சூர்யா ஒரு மூலை யில் அமர்ந்து சுவாரஸ்யமாக ஏதோ படித் துக் கொண்டிருந்தான். ராஜியும் ஒரு சஞ்சிகையை எடுத்துக் கொண்டு சூர்யா வினருகே சென்றாள்.

பக்கத்தில் ராஜி வந்து நிற்பது கூடத் தெரியாது பத்திரிகையில் ஆழ்ந்திருந் தான். இதுவரை ராஜிக்கு இத்தனை அருகாமையில் பேச சந்தர்ப்பம் கிடைக் கவில்லை, அதனால் எப்படிப் பேசுவது என்று தயக்கமாக இருந்தது.

"க்கும்... க்கும்" மெதுவாக செருமினாள். யார் என்று நிமிர்ந்தவனுக்கு ஆச்சரிய மாக போய்விட்டது. ராஜியா....? அதுவும் பக்கத்தில் நின்று..

"எப்பவந்தாய்.... ராஜி" "ஓ ஐ ஆம் சொறி நான் கவனிக்கவில்லை, எப்ப வந்தனிங்க."

"இப்பதான்... ஏன் இத்தனை ஆர்வமாய் படிப்பவரை குழப்புவான் என்றுதான்..." இழுத்தாள்.

"இருங்களேன் என்றால்தான் இருப்பீங் களா..." இருந்துவிட்டாள் ராஜி.

"எப்படி ராஜி படிப்புகள் ஒன்றும் கஷ்ர மில்லையா. அப்படி ஏதாவது டவுட் என் றால் என்னிடம் சொல்லுங்கள் சொல்லித் தாறன்.

ராஜிக்கு சூர்யா இப்படிக் கேட்டதில் சந் தோஷமாக இருந்தது. எத்தனை அக்க றையோடு விசாரிக்கிறான். உண்மையில் சூர்யாவிற்கு என்னில் விருப்பம் தான். உள்மனம் கூறியது.

"அதுசரி சூர்யா என்ன படித்துக் கொண்டி ருந்தீர்கள்"

அது ஒரு உண்மைச் சம்பவம் ஒன்று இருந்தது. அதை வாசிக்க வாசிக்க ஏனோ கவலையாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. அதுதான் நீங்கள் வந்தது கூடத் தெரியாமல் இருந்து விட்டேன்"

அப்படியென்ன சூர்யா ஏதாவது விபத்தா.. என்பதுபோல் சூர்யாவை ஏறிட்டு நோக்கி னாள் ராஜி.

எனக்கும் சொல்லி உன் துக்கத்தில் பகிர்ந்து கொள்ள மாட்டாயா என்பது போல் இருந்தது சூர்யாவிற்கு ராஜியின் பார்வை.

விதவையொருத்தி இந்த சமூகத்தில் தன் னால் நிம்மதியாக வாழ இயலாமல் தற் கொலை செய்துவிட்டாள் ராஜி. ஏன் ராஜி விதவையென்றால் சாகத்தான் வேணுமா.. ஏன் அவள் வாழ்ந்து விடக் கூடாது. நீயே சொல்லுராஜி அவள் செய்தது ஞாயமா...? சூர்யா ஆதங்கத்துடன் கேட்டான்.

என்ன சூர்யா எனக்கு என்ன சொல்கிறீங் கள் என்றே தெரியவில்லை.

ஓ Sorry ராஜி உனக்கு நான் இன்னும் முழுவதும் கூறவில்லையா? அதாவது ராஜி இந்த பெண்ணுக்கு திருமணம் செய்த சில மாதங்களிலேயே விபத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் கணவன் அகாலமரணமடைந்து விட்டான். இதனால் புகுந்த வீட்டில் அவள் ஒரு ராசியில்லாதவள் என்று முத்திரை குத்தப்படுகின்றாள். நீ வந்த சகுணம் சரியில்லை என்று முன்னுக்கு வராதை என ஆளாளிற்குத் திட்டத் தொடங்கினர்.

சூர்யா சொல்ல ராஜிக்கு கவலையோடு கோபமும் ஏற்பட்டது. ஏன் சூர்யா இந்த மனிதர் இப்படி நடத்துகின்றனர் பெண் களை. அவளும் ஒரு ஜீவன்தானே. அவன் அற்ப ஆயுசில் போனதிற்கு இவளா காரணம், அவனது கவனக் குறைவுதானே சூர்யா பிறகேன் இப்பிடி........ ராஜிக்கு மேலே பேசமுடியாது படபடப்பாக இருந்தது.

ஏன் சூர்யா ஒருத்திக்கு துணையில்லாது போனால் இப்பிடியா நடப்பார்கள்.

இல்லை ராஜி........ எல்லாருமே இப்பிடியில்லை. ஆனால் படித்தவர்கள் கூட மூட நம்பிக்கையிலிருப்பதுதான் கூட வேதனையாக இருக்கிறது.

மேலே சொல்லுங்கள் சூர்யா பிறகென்ன நடந்தது.

அவள் தன்னை ஒருவாறு தேற்றி வேலைக்கு செல்லத் தொடங்க வேறு தொல்லைகள் வந்து சேருகிறது. ஆளாளிற்கு உரசிப் பார்ப்போம் என்ற விதத்தில் பேசுவதும் கேலி செய்வதும் அவளால் எழுந்து நடக்க விடாமல் செய்வதில் எல்லோருமே ஆர்வமாக இருந்தனர். அந்தப் பெண்ணானவள் துவண்டு போகின்ற வேளையெல்லாம் அவளைத் தேற்றுவதற்கென்றே அவளுடன் வேலைபார்த்தவன் ஒருவன் இருந்தான். இருந்தும் என்ன பயன் ஆளாளிற்கு இருவரையும் சேர்த்துக் கதைத்தனர்.

அவள் மாட்டேன் என்று கூறவும் மறுமணத்திற்கு சம்மதிக்க வைத்தவன்....... மேலே சூர்யா தொடராது நிறுத்தினான்.

"ஏன் சூர்யா விட்டிட்டீங்கள் சொல்லுங்களேன் அவளை அவன் திருமணம் செய்தவன்தானே பிறகும் ஏன்.... தற்கொலை... ஒன்றும் புரியாது சூர்யாவைப் பார்த்தாள்.

ஆமாம் ராஜி அவளை சம்மதிக்க வைத்தவன் தனது வீட்டாரை சம்மதிக்க வைக்க முடியவில்லை. ஏன் சூர்யா அவர்கள் சம்மதம், தான் எடுத்த முடிவை செயல் படுத்த முடியாதவன் கோழை தானே.

அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது ராஜி ஆனால் அவன் நிலையில் நாமும் இருந்தால் என்ன முடிவு எடுப்போமோ...?

அப்படியென்றால் விதவைகள் மறுமணத்தை நீங்கள் கூட விரும்பவில்லை.... அப்படித்தானே சூர்யா......? நான் கூட உங்களை என்னவோவென்று நினைத்தேன்.... ராஜி கோபத்தில் கத்தினாள்.

லைபிறரியில் இருந்தவர்கள் அவர்கள் பக்கம் பார்வையை நகர்த்தினர்.

நோ நோ ராஜி என்னை நீ, Sorry நீங்கள் தப்பாகப் புரிந்து விட்டீர்கள். எனக்கு இதில் சம்மதம்தான் நான் சொல்ல வந்தது அவன் குடும்ப சூழல். அதாவது இவன் அவளைக் கட்டினால் தாங்கள் தற்கொலை செய்வோம் என மிரட்டும் பெற்றோர் மத்தியில் அவன் என்னதான் செய்ய முடியும். சொல்லுங்கள் ராஜி....

எனக்கு அவன் கோழையாய்த் தான் தெரிகிறான். இதெல்லாம் ஒரு சாட்டு சூர்யா. பெற்றோர் அத்தியாயம் முடிகின்ற வேளையில் இவன் தொடக்கம் தானே. அதனால் அவர்களைப் பற்றி நினைக்காமல் இவன் தன்முடிவை செயல்படுத்தியிருக்கலாம் என்றுதான் நான் கூறுவேன். ராஜி படபடத்ததை நினைக்க சூர்யாவிற்கு சிரிப்பாக இருந்தது.

ராஜி நீயா இப்படி பேசுகிறாய் என்பது போல் பார்த்தான் அவளை. அப்படியில்லை ராஜி..... என்ன அப்படியில்லை, சூர்யா நீங்கள் ஒரு விதவையைக் கட்ட நிர்ப்பந்தம் வந்தால்.......... ஏற்றுக் கொள்வீர்களா....?

Yes of course ராஜி. நான் அவன் நிலமையைத் தான் கூறவந்தேனே ஒழிய என்னைக் கூறவில்லையே. அது இருக்கட்டும் ராஜி உங்களுக்கு இப்படியொரு நிலமை வந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

ராஜி பதிலே சொல்லாதிருந்தால். ஏன் ராஜி மௌனம் சொல்லுங்கள் நீங்கள் என்ன செய்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வந்து.... எனக்கு ஏன் இந்த நிலை வரப்போகிறது... இழுத்தாள் ராஜி.

இல்லை ராஜி சில வேளை இப்படி நடந்தால்....

"ஸ்ரொபிற் சூர்யா எனக்கு இப்பிடி நடக்காது. அப்பிடி நடந்தால் என்னால் இனியொருவனை நினைக்கேலாது.

எப்படி ராஜி அவளுக்கு நியாயம் என்று விட்டு உங்களுக்கு வரும்போது...... சமுதாயத்திற்காக தயங்குகிறீர்களா?

இல்லை இந்த நாய் சமுதாயம் எனக்கெதற்கு சூர்யா... என்னால் தனியா வாழ முடியும் சூர்யா.

அப்படி சொல்லேலாது ராஜி. உங்களுக்கு பிள்ளைகள் இருந்து அவர்களுக்கு பக்கபலமாக அதாவது நீங்கள் பிடித்து செல்வதற்கு நல்ல ஊன்றுகோலாக ஒரு துணை தேவையென்றால் நிச்சயமாக அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேணும் ராஜி.

ராஜி ஒன்றுமே சொல்லது இருந்தாள். இல்லை..... நான் வந்து...... என இழுக்கத் தொடங்கு முன்பாக சூர்யா இப்ப ஏன் வீணான விவாதம் ராஜி. பார்த்தீர்களா லைபிறரியில் எம்மிருவரைத் தவிர வேறு ஒருவரையும் காணவில்லை. வாங்கள் கலைப்பதற்கு முன் போய் விடுவோம்.


ராஜி எழுந்தாள். மனம் ஏனோ பாரமாக இருந்தது.

அடுத்த இதழில் தொடரும்...

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோஜா வின்

# சொற் சிலம்பம்

### போட்டி இல: 3

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அதிஷ்டசாலிகள்:-

1. **ந. மகானம்** (ரொறன்ரோ) $50
2. **நே. யோகேஸ்** (ரொறன்ரோ) $25
3. **சு. நேசராஜா** (ரொறன்ரோ) $15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வெ | 2 லி | ங் | 3 ட | ன் | ■ | 4 ப | 5 சு |
| 6 கு | கை | ■ | 7 மா | த | 8 வி | ■ | ப |
| 9 ம | க | ளி | ர் | 10 ம | ட் | டு | ம் |
| தி | அ | 11 க | ■ | ■ | டி | ■ | ■ |
| ■ | ■ | ■ | 12 அ | 13 வ | ல் | ■ | 14 கு |
| 15 து | றை | 16 மு | க | ம் | ■ | 17 ச | ரி |
| ■ | 18 ச | கி | ப் | பு | ■ | 19 கா | ய |
| 20 த | 21 பா | ல் | லை | ■ | 22 அ | ய | ன் |

உங்கள் பதில்கள் யாவும் ஜுலை 10, 1995ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'ரோஜா' வின் முகவரிக்கோ அல்லது Faxக்கோ அனுப்பி வையுங்கள்.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் மூவருக்கான $50, $25, $15 பரிசில்களை 'எல். கிரிஷோத் ரைப்செட்டிங்' ஸ்தாபனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.

# வானொலி நிகழ்ச்சிகள்

| சங்கமம் | கீதவாணி | தமிழ்ச் சோலை | நற்செய்தி |
|---|---|---|---|
| AM 1320 KHz | CIRV 88.9FM | AM 1320 KHz | AM 1540 KHz |
| புதன் | சனி | ஞாயிறு | செவ்வாய் |
| மாலை | காலை 8.00-10.00 | காலை | மாலை |
| 9.00-10.00 | ஞாயிறு காலை 6.00-8.00 | 9.00-10.00 | 10.00-10.45 |

## RADIO ASIA - 530 AM அலைவரிசையில்...

திங்கள் முதல் - வெள்ளி வரை
மாலை 8.30 - 10.00
சனி, ஞாயிறு :~ மாலை 9.00 - 10.00
'ராகப்பிரவாகம்', 'சங்கராபரணம்', 'தமிழ் ஒலி', 'குங்குமம்'

'தமிழரங்கம்' :~ AM 1540 KHz - செவ்வாய் மாலை 10.45 - 11.30

"தமிழோசை" 1320 AM அலைவரிசையில்...
வெள்ளி மாலை 10.30 மணி முதல்...
சனி மாலை 10.00 மணி முதல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமிருந்து வலம்.

1. இது புருஷலட்சணம் என்கின்றது பழமொழி.
4. தழும்பு-தாமிரம்-வண்டு-வாள்.
5. சுவை.
8. மடிப்பும் சேர்ப்பவர் திரைப்பட நடிகை விசித்ராவை இப்படி அழைப்பர்.
9. அல்பிரட் துரையப்பா கொலையுண்ட இடம்.
10. இறுதி எழுத்தை இழந்துள்ளார் வரகவி.
11. வெறிபிடித்தோரிடம் இது இருப்பதில்லை.
12. வேள்விக் கூடம்.
14. தமிழ்நாட்டில் உப்புமாவிற்குப் பயன்படுவது.
16. பாஷை.
17. விளிம்பு.
21. கர்வம்.

## மேலிருந்து கீழ்.

1. தாரகை.
2. தமிழீழத்தின் தலைநகர் இப்படியும் அழைக்கப்படும்.
3. சிந்தனை செய்.
6. புத்தர் ஞானம் பெற்றது வைகாசியில்
7. காலத்தால் அழியாத ஐரோப்பிய புன்னகை அரசி.
8. நடிகர் நாசரின் இயக்கத்தில் வெளிவந்த திரைப்படம்.
9. திருக்குறள்.
13. சீட்டுக் கட்டுபவர்கள் இது அதிகரிப்பதை வரவேற்பர்.
18. ராமவம்சம்.
19. இடைஞ்சல்.

## கீழிருந்து மேல்

15. குரங்கு ஒரு எழுத்து இடம் மாறினால் பன்றி.
17. அந்தக்கால அரசின் அஞ்சல்.

## குழம்பியுள்ளது

20. நாசம் - சேதம்

ரோஜா வின்


**சொற் சிலம்பம்**

போட்டி

இல:- 4

தயாரிப்பு:

எஸ். ஜெகதீசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP




உங்களின் சகல விதமான
திருத்த வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.
உங்கள் மனநிறைவுக்கு
நாங்கள் உத்தரவாதம்.

- ***Tune-up***
- ***Brakes***
- ***Transmission & Engines rebuilt***
- ***Air-Condition***
- ***Body Work***

**Domestic, European & Japanese car & Vans.**

**We are specialized in**

**HONDA**

***IRIE***
*CA SERVICES*


**86 MELFORD DR, UNIT.5,
SCARBOROUGH, ONT.**

**தொடர்புகளுக்கு:~**
*S. Ruban*
**(416) 299-0452**




ரோஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org